Don Bosco

Vl. No. 42 18 Oct 1928.

BL
000211/N28KH
N28·1·42
189025

Reg. No. M. 2324.

தனிப்பிரதி ரு. 0 3 0

கலாநிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்

வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா

இந்தியா, பர்மா, லிலோன் ரு. 7 8 0

புற நாடு ... ... ரு. 9 0 0

காரியாலயம்:—

No. 11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928வது அக்டோபர் மீ 18உ [No. 42.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader).	821
2.	சேக்ஸ்பீரும் திருக்கண்ணப்பரும். T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	823
3.	எபிஜூரன், ஜீனேன், பைரோன். T. R. இராஜகோபால்	825
4.	தமிழ்ப் பாடம்.	828
5.	கம்பராமாயணம். T. N. சேஷாசலம் B. A., B. L.	830
6.	வானசாஸ்திரம்	832
7.	அகப்பொருள் வாலாறு K. இராமாநுசம் ஐயர் B.A.	833
8.	சாந்திமதி (A Novel). T. N. சேஷாசலம் B. A., B. L.	835
9.	வர்த்தமானம்.	836

கலாநிலயம்.

அரசியலும் அரவிந்தரும்.

III

பொது ஜனங்களுக்குப் பிரதிநிதிகளாய் முன் தோன்றி நடமாடுகின்றவர்களை, அச்சனங்களைச் சேர்ந்தவர்களிலேயே சிலர் பின்தொடர்வதுபோல் சிறிதுகாள் சூழ்ந்திலந்து பிறகு தலைக்கொரு தலைவராய்ப் பிரிந்துபோகின்ற இயற்கையை முன் காட்டினேம். இனி, இவ்வாறு பிரிந்து போனவர் ஒவ்வொருவரும் தனித்தனித் தாமும் அச்சனங்களுடைய ஆதரவைப் பெறவேண்டியவர் களா யிருக்கின்றனர். எனின், பெற்றுள அச்சனங் கள் மதிப்பை இழக்காதிருப்பதற்கு முதல் தோன் றியவரும், பிரிந்தகன்றவர் அதனைப் புதியதாய்ப் பெறுதற்கும் செடிதே முயல கோக்கின்றது. தன் னைப் பிறர் கொண்டாடவேண்டு மென்றல் தானு மவர்களைப் பலவிதத்தில் வழிபடவேண்டி வருவது உலக இயற்கை. காதலுக்கும் கடவுளுக்கும் செலுத்துவதுபோல் தோத்திரமும் காணிக்கையும் இப்பொதுஜனங்களுக்குச் செலுத்தத் தலைப்படு கின்றனர். ஆளுக்கொரு இடர் தேடிப் பொதுக் கூட்டங்கள் சேர்த்து எங்கெங்கும் யாவரும் பல படப் பேசக் கேட்கின்றோம். "ஜனங்களே, என்னுடைய உயிர் நீங்கள். உங்களுக்கு இருக்கும் குறைகளை யெல்லாம் நிவர்த்தாலே என் அங்கம் குளிகின்றதே. உங்களுக்குத் தீது செய்யும் பாதகர் பலர் உளர். அவர்களை யெல் லாம் நம்பவேண்டா. நீங்கள் எஜமானர், நானும் உங்களுக்கு ஊழியன். நீங்கள் இட்ட பணியைச் செய்ய நான் கடைவாயில் காத்திருக்கின்றேன். .....உங்களுக்கு இன்னஇன்ன செய்து வைக்க வேண்டுமென்பது என் சித்தம்" என்று இன்னவாறு அச்சனங்களுக்குள்ள கஷ்டம் குறை களை நிவர்த்தது அவர்களோடு சேர்ந்தழுவதும், அக் குறைகளை நீக்குகின்றேன் என்று தனக்கு முன் வந்திருப்பவர்களைப் பழிப்பதும், தானிச் சனங் களுக்குத் தொழும்பு பூண்டு தாழ்வதும், எதிர் காலத்தில் ஏதேதோ எய்துவதற்குள நன்மைகளை இன்று உலோபமின்றி வாக்களிப்பதும் அரசியல் வாதத்தில் தலையிட் டிருக்கின்ற ஒவ்வொருவனுக் கும் ஏற்ற தொழில்களாகின்றன. இத்தமுயற்சியில் சற்று இளைத்தவன் முழுவதும் தோற்றவனுவான். வியாதியும் பெரியது, அதை நீக்குகின்றதோ எனக் கே எளிது, என்று விளம்பரஞ் செய்யும் வைத்திய னிடத்தே பற்று ஊன்றுமாதலால் குறைகளைப் பெரிதும் கூறித் தமது ஆற்றலை வற்புறுத்த லல் லாது இத்தலைவர் வேறு யாது செய்வார். இனித் தத்தமக்குள்ள ஆற்றலோ, ஆற்ற வேண்டிய தி எது வென்று நிச்சயமற்றுக் கிடப்பது போலவே, சொல்லும் தரமற்றதாய் இருக்கின்றது. ஆதலால் மற்றவரைப் பழிக்கின்ற முகமாகத் தம்முடைய மேன்மையும் ஆற்றலும் எஞ்ச வேண்டிய நிலையின் நுட்பத்தை யுணர்ந்து அதற்கிணங்கப் பழிச்சொற் களே பெரிதும் பாராட்டுப வராகின்றனர். எனின் உன் வசை உயர்ந்ததோ, என் வசை உயர்ந்ததோ;

உன் குரல் உரத்ததோ என் குரல் உரத்ததோ ; நாவினால் கொடைபல நல்கவல்லவன் நீயோ நானோ! என்றென்று இகலித்திரியும் தொழிலே மேற் கொள்வது இன்றியமையாததானபின், ஆதியில் நினைத்த நோக்கத்தில் நினைவும், அதனையே எய்த வேண்டுமென்னும் ஊக்கமும், நிற்பதற்கு அவர் மனதில் நிழலேது, நடப்பதற்கு இவ்வுலகில் பொழுதுதான் ஏது!

ஆதலால், தங்குறை யாதென இயம்புதற்கிய லாத ஊமைச்சனங்கள் ஒரு கோடிக்கு "நும் குறை இது" என்று கற்பிப்பதும், அக்குறை களால் வரும் கஷ்ட நஷ்டங்களுக்குக் காரணமா யிருப்பவர் எவரெனக் காட்டித் தருவதும் கரும மாயிற்றென்றால் வேறு சில புகல்வானேன். அவர் களே ஆளும் ஆட்சியில் குறை, அவர் செய்யும் தொழிலிற் குறை, அவர்கள் பிறந்தசாதியாற் குறை, அவர்தமைப் படைத்த கடவுளே குறை எனக் குறைகளைக் காட்டிக்காட்டிப் பகையும் பொய்யும் பொருமையும் தகவிலாச் செயல்களும்மொழி களும் எழுப்பிவிட்டுத் தன்னை தன்னைச் சுடும் போது, "யாவையும் தம்பொருட்டுத் தியாகம் செய்துவிட்ட எனக்குக் கிடைக்கும்இதுவோ கைம் மாறு" என்று ஏங்கியேங்கி முதலாக நின்றிருந்த பேர்களும் இருந்தவிடம் தெரியாமல் முடிந்து விடுகின்றனர். அரசியல்வாதிகள் வரலாறு இப் படியே பாரம்பர்யமாய் நிகழ்வதால் இதனின்று வேறுபட முற்றிலும் விவகரிப்பார் காண்பது அரி தாகிக்கிடக்கின்றது. சாத்தனும் கொற்றனும் இலக் கண விதிகளுக்கு உதாரணம் ஆவதுபோல் இவ்வர சியல்வாத வாழ்க்கையிலும் சாத்தனும் கொற்ற னுமே எல்லாரும் நாளடைவில் ஆகிவிடக் காண் கின்றோம். உத்தம சித்தத்தோடு உலகத்தை உய் விக்கவென்ற அரசியல் வாதங்களில் ஊடாடப் புகுந்த மேன்மக்கள் கொண்டெழுந்த நோக்கமெல் லாம் கீளபடர்ந்து முளையிலே அழிந்துபோகின் றன. இதனோடு நின்றால் நீதேனும் இல்லையே. உலகநடையில் இவர் தோன்றி மறைவதோடு அவர் எடுத்த கருமம் முடிவதில்லை. உண்மையாய் உழைக்க வந்த ஒருவரது புகழின் நிழலின்கீழ், பத்துப்பேர் மூள்ளெனத்தைக்கும் பொய்யுடைய நாவினர் வளரலாகின்றனர். வளர்ந்த இவர் காடாய்ப் படர்ந்து மரத்தையே மறைத்து விடுவது மல்லாமல், உலகெங்கும் தம்மிற் பழுத்த முள்ளின் விதையை விதைத்துக்கொண்டு போய் "அற்பத் தனம் சுயலாபப்பேராசை அகங்காரம் பேதமை" ஆதியாய அவலக் காடுகளே எங்கும் வளர்ந்தோங் கச் செய்கின்றனர். பொதுஜனங்களைப் பெரும் பான்மை இவ்விதமாக மாற்றிவிட்டபின், இனி அவர்களுக்குப் பிரதிநிதியாய்ப் பேசுகின்றவர் களும் விவகரிப்பவர்களும் ஸ்ரீ. அரவிந்தர் சொல் லினபடி, அவ்விழிய குணங்களுக்குத்தானே பிரதிநிதியா யிருக்கக் கூடும். பொதுஜனங்களுக்கு இயற்கையாயுள்ள ஆன்ம உணர்வினையும் பிழிந் தெறிய முயல்கின்ற இத்தகையவர் "அவ்வான் மாவிற் சூரிய தாகத்தினைத் தாமேற்றுத் தெரியக் காட்டி நிற்பவர்" எங்ஙனம் ஆதல் கூடும்.

இத்தனைக்குங் காரணம், பொது ஜனங்கள் என்றுசொல்லப் படுகின்றவர்களை — அவர்கள் இன்னுரென்று எல்லையுட்படுத்தி வருணிப் பது சுலபமன்று—நாம் இங்கு முன் பல விடங்க ளில் குறிப்பாற் கூறிய வகைகளில், பலபடப் பாராட்டி ஆராதிக்கவேண்டி நேர்கின்ற அவசியமே யாகும் என்பதற்குப் பெரியதோர் ஐயமில்லை. எமர்ஸன் உலகஇயல் அறியாதவ ரல்லர். உண் மைத் திறம் தெரியாதவ ரல்லர். அவர், ஜனங்கள் பால் அன்பிருக்கு மொருவன், அவர்களைப் பாட சாலைப் பிள்ளைகள்போல் இடித்துரைத்து இவ் வழி நடவுங்க ளென்று படிப்பிப்ப தன்றியே, இச்சகம்பாடிப் பாராட்டுவதினுலேயே எண் ணரியதீங்குகள் பரவுகின்றனவென்று மிகவும்துண் ணிதாய்க் காட்டிய வாய்மையை ஒருவன் மறந்தால் அவன் அரவிந்தர் வகுத்த இலக்கணத்திற்கு இலக் காகாமல் அயல்நிற்க இயலாதவன் ஆகின்றான். கல்வி அறிவு முதலிய செல்வங்களும் அச்செல்வங்களைச் சனங்கள்பால் பயன்படுத்தவேண்டும் என்னும் அன்பும் வாய்ந்தவர், தம்மையே தமக்குத் துணை யாய் நம்பிப் பிறருதவி எள்ளளவும் வேண்டாமல், என்ன வகையில் நன்மை செய்ய வேண்டுமென்று நினைக்கின்றார்களோ அந்நன்மைகளைத் தம்மா லியன்ற அளவு தம்முடைய மனச்சாக்ஷிக்கு கேரி தென்ற நெறியில் முயல்வதே கடனாக அமைவாரா யின், ஜனங்களின் ஆதரவைத் தாம் பெற வேண் டும் என்னும் அவசியம் ஏற்படாதாகையால், எண் ணிய நலங்களிற் சிலவேனும் சாதிப்பவராவர். கட்சி வேண்டா; கூட்டுறவுச் சங்கங்கள் வேண்டா. பிறரிடத்திலிருந்து பெறுவது கருத்தாகுங் காலை யிற்றான் கட்சியும் கூட்டுறவுச் சங்கங்களும் வேண் டும். பிறருக்கொன்று கொடுப்பதற்கோ, கொடுப் போனும் கொடைப்பொருளும் தவிர மற்றவெல் லாம் மிகையே யன்றிப் பகையும் ஆகும். "உன் னுடைய அன்பும் நோக்கமும் தூயவாயின், அவை களுக்கு உதவி செய்வானென்று நீ சேர்த்துக்கொ ள்ளும் ஒவ்வொருவனும் வாஸ்தவத்தில் உன்னை மேன்மேலும் பலவீனனுக்கி விடுகின்றான்," என்று எமர்ஸனே வேறோரிடத்தில் முறையிடுகின்றார். பத்துப்பேர் ஒன்று கூடினால் அப்பதின்மருக்கும் நோக்கம் நெடுங்காலம் ஒன்றேயாய் நிகழ இய லாது. அதனினும் இப்பதின்மரில் ஒவ்வொரு வனும் தன்னாலேயே தம் கட்சி நடைபெறுகிற தென்று எண்ணவும் சொல்லவும் நேர்ந்துவிடுவது இயற்கை. இனி இவர்களுக் குள்ளேயே 'நீயோ நானோ முதல்' என்னும் போராட்டம் புகுந்தலைக்க நேர்கின்றது. இது சமாதானமாக வேண்டுமென் றால் முதன்மையாய் நின்றவன் தன் கொள்கையின் ஒரு பகுதி மற்றவர் கருத்திற்கிசைந்து விட்டுக் கொடுக்காமல் தீராது. இனித் தன் கட்சியினரைத் தட்டிக் கொடுப்பதற்கும் அயல் கட்சியினரை எட் டியடிப்பதற்கும் இவன் காலமும் கருத்தும் செல வாக, ஆன்ம உணர்விற்கும் வாழ்க்கைத் தத்துவத் திற்கும் நேரமேது இடமேது நினைவேது! சேற் றிலே இட்ட கால் மாறி மாறி ஆழ்ந்துழல, விசும் பும் இருசுடரும் விண்மீனும் விளக்கவரு வைபவ த்தைக் காணக் கண் நாடுமெனல் ஒண்ணுமோ! மண்ணிலேயே கண்ணுய், பரிகசித்துக் கைகளைத் தட்டுவோர் தாளத்திற் கிணங்கிச் சதிபிசித்திருப் பதே இன்னோர் கடன்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[811-ம் பக்கத் தொடர்ச்சி]

பலரும் பல்வகை யாதல்.

நாணனும் காடனும்.

மிகுதியாக நின்றவர்கள் நாணனும் காடனுமே. சிவ கோசரியாரைமுன்னையநூல்கள் எல்லாம்குறித்துள்ளன. நாகனதுபேரையும் தத்தையின்பேரையும் நக்கீரர்சொல் லிவைத்தார். ஆனால் நாணனையும் காடனையும் பற்றிச் சேக்கிழாரே முதல்முதலாகப் பேசுகின்றார். வேடர்களது வாழ்க்கையை முன் வினக்கினர். அத்தகைய வேடர்களுக் குத்தெண்ணனுதி நிருவாழ்க்கை எங்ஙனம் புலப்பட்டது என்று சொல்ல வேண்டாமா? ஒன்றே பலருக்கும் பல வாறு தோன்றும். குருடர்கள் யானையைக் கண்டறிந்த கதையை முன்னரே எடுத்துரைத்தோம். கண்ணப் பாது வழிபாடு கண்ணப்பருக்கு எவ்வாறு தோன்றிற்று என்பதை அறிந்தோம். அவ்வழிபாட்டைக் கண்டு சிவகோசரியார் எவ்வாறு மனம் புழுங்கினர் என்ப தைக் கண்டோம். சிவபெருமானுக்கு அவ்வழிபாடு எவ்வாறு ஏற்றதாயிற்று என்பதைச் சிவகோசரியாரது கனவிலே சிவபெருமானே வந்து நிருவாய் மலர்ந்தருளி யதையும் கேட்டோம். சேக்கிழார் இவ்வழிபாட்டை எவ்வாறு புகழ்ந்து பாராட்டினர் என்பதைத் தெரிந்து கொண்டோம். தேவராட்டியும் காளனும் கண்ணப் பரைக் கைவிட்டுப் போனதையும் பார்த்தோம். இனி வேடர்களுக்கு இவ்வழிபாடு எவ்வாறு தோன்றியது? இதனை நமக்கு அறிவிக்கவே நாணனையும் காடனையும் உடனழைத்து வருகின்றார் சேக்கிழார். இவ்வாறு எழுந்த பலவகையான கொள்கைகளை அறிவதால் கண் ணப்பரது வழிபாட்டின் உண்மைநிலையினை நாம் உணர்ந்து கொள்கின்றோம்.

வேட்டையாடும்பொழுது பன்றியொன்று புறப்பட்டு வருவதைக் கண்டு அதைத் துரத்திக்கொண்டோடினர் நிண்ணனர். எல்லோரும் பின்தங்கினர். ஆனால் விடலை கள் இருவர் அவரை விடாது அடியொற்றியே போய் அவரைச் சேர்ந்தார்கள்.

போமதனை அடுதிறலொடு பெருமறவர்க ளரியே
றுமவர்தொடர் வுறும்விசையுட னடிவழிசெலு மனவிற்
றுமொருவரு மறிதிலரவர் தனிதொடர்வுழி யதன்மேல்
எழுனெயடு சிலவிடலைக ளிருவர்களடி பிரியார்.

நாடியகழல் வயவர்களவர் காணுமெடு வரிவிற்
காடனுமெனு மிருவருமலை காவலொடு கடிதிற்
கூடினர்விடு பகழிகளொடு கொலைஞமலிகள் வழுவி
நீடியசரி படர்வதருகு நீழலின்விரை கேழல்

இதனின்றுமே அவர்கள் வேடர்களில் சிறந்தவர்கள் என்பதும் நிண்ணனுரோடு ஒருங்கே பயின்று அவருக் குப் பக்கத்தினையிய உயிர்த்தோழர்கள் என்பதும் தெளிவாயின. ஒருகுத்தில் இரண்டுதண்டாய் வீழ்ந்தது பன்றி. நிண்ணனரைப் புகழ்ந்து அவர் நிறமையைத் தெரிவிக்க நமது நல்லகாலத்தின் பயனுக நாணனும் காடனும் அங்கு இருந்தனர். அவரது வேட்டைத் திறத்தை வியந்து அவரது அடியில் விழுந்து வணங்கி னர்கள்.

வேடர்தம் கரிய செங்கண் வில்லியார் விசையிற் குத்த
மாடிருதுணியாய் வீழ்ந்த வராகத்தைக் கண்டுநாணன்
காடனே இதன்பினின்றுகாதங்கள் பலவர்தெய்த்தோம்
ஆடவன் கொன்றான் அச்சோவென்றவர் அடியில் தாழ்ந்
[தார்.

இந்த இடத்திற்குச் சிறிது முன்பாக வேட்டை என் னும் எளிமேல் பற்றி எரிந்தது. இனிச் சிறிது போனதும் அன்பென்னும் வெள்ளம் கரைபுரண்டு வரப்போகின்றது. இவற்றிற்கு இடையே நமது மனக்கினர்ச்சியை அடக்க அமைதியான கதையைச் சொல்லிப் போகின்றார் சேக்கி ழார். இவ்வமைதியின் பக்கத்திலே இதற்கு மாறுகி நிற்கும் ஆரவாரங்கள் பெருத்த ஆரவாரங்க ளாகின்றன. பெரும் புலவர்கள் எல்லாம் இவ்வாறு சுவையை மாற்றிமாற்றிப் பாடிப்போவது வழக்கம். மாக்பெத் என்ற கூத்துநூலில் வரும் பாங்கே என்ற கொடியவன் மால்கம் என்பவ னது மனைவிமக்களைக் கொல்லக் கொலையாளிகளை அனுப்புகின்றான். அவர்கள் வருவதற்குமுன் அம்மனை வியும் மகனும், குருவியும் குஞ்சும் கொஞ்சிக் குலாவுவது போல விளையாடிப் பேசி மகிழ்வதைப் புனைந்துரைக் கின்றார் ஷேக்ஸ்பியர். அது ஒரு இடமல்ல; பலவிடத் தும் அவரது நூல்களில் இதைப் பார்க்கக் காணலாம். ஹோமர் முதலிய பெரும் புலவர்கள் நூலிலும் சண் டைக்கும் போருக்கும் முன்னும்பின்னும் இயற்கை யைப் புனைந்துரைத்தல், காட்டுப்புற வாழ்க்கையைப் புகழ்தல் போன்ற அமைதியான பகுதிகள் வரக் காண் கின்றோம். அவ்வாறன்றி ஒரே மூச்சாக மனக்கினர்ச் சியை எழுப்பிக்கொண்டு போனால் மனம் உடைத்து போகும்; அல்லது அவை தெவிட்டிப் போகும். நமது கம்பரும் இத்த உளவறிந்தவர். விராதன் வதைப் படலத் திற்கும் சூர்ப்பணகைப் படலத்திற்கும் நடுவில் கோதா வரிக் காட்சி ஒன்று கூறுகின்றார். விராதனோடு நடந்த சண்டைக்கும், சூர்ப்பணகையோடு நடக்கப் போகும் சச்சரவுக்கும் நடுவே கோதாவரிக் கரையில் இராமரும் சீதையும் ஒருவரை ஒருவர் கண்டு மகிழ்ந்து பேசிப் போவதை மனங்குளிரப் பாடிப் போகின்றார். அதே போலச் சேக்கிழாரும் இங்கும் இம் மூவர்கள் தனி வழியே முகலியாற்றங் கரையில் பேசிப் போவதை விரித் துரைக்கின்றார்.

காலையிலே புறப்பட்டவர்கள். கடும்பகலாகி விட் டது. ஓடோடியும் வந்ததால் களைப்பு மேலிட்டது, பசியும் அவர்களை வாட்டத் தொடங்கியது. இத னைத் நிண்ணனருக்கு அவ்விருவரும் தெரிவித்தனர். பன்றியைச் சுட்டுத் தின்று தண்ணீரைக் குடித் துவிட்டுப் பின்னர் மற்றவர்களைத் தேடிக்கொண்டு போகலாம் என்றார்கள். பசியால் வாடியபோதும் அர சன் முதலில் அருந்த வேண்டும், பின்னரே தாம் தின்ன வேண்டும் என்ற முறையை மறந்திலர். அகப்பட்டால் போதும் என்ற கண்டதை இழுத்துக் கடித்து வலிக் கும் விலங்குகள் நீனி நின்பதுபோலத் தாம் தின்னும் இழி நிலையையும், செம்புலி பசித்தாலும் புல்லைத்தின்னு மா? என்பதற் கினங்கத் நிண்ணனர் அழி பசியுற்றாலும் பதைபதைப் பின்றி ஒழுங்காக அரச மிடுக்கோடும் உணர் வோடும் நல்ல என்ற தேர்ந்தெடுத்தவற்றைச் சுவை யறிந்து ஆர அமர அருந்தும் உயர் நிலையையும், குறிப் பாகக் காட்டினர்.

மற்றவர் திண்ண னூர்க்கு
மொழிகின்ரூர் வழிவந் தாற்ற
உற்றது பசிவந் தெம்மை
உதவிய இதனைக் காய்ச்சிச்
சற்றுநீ அருந்தி யாமுஞ்
சிறுதண் ணீர்கு டித்து
வெற்றிகொள் வேட்டைக் காடு
குறுகுவோம் மெல்ல என்ரூர்.

என்பது திண்ணனூர் நாகரிகமடைந்த வேடர் என்பதை வற்புறுத்துகின்றது.

தண்ணீரைப்பற்றி அவர்கள் சொல்லவும், உணவினும் நீரே வேண்டும் என்ற எண்ணி "எங்கே தண்ணீர் உன்னது" என்று வினவினர். தண்ணீர் தேடிச் சென்ரூல்தானே காளத்திமலே கண்ணில் படும். இயற்கை இவரை இவ்வாறு ஈர்த்துச் செல்கின்றது. இவர்களது எதிரே தோன்றும் பல மரங்களில் பெரிதாய் உயர்ந் நிருக்கும் தேக்கமரம் ஒன்றினைச் சுட்டிக்காட்டி அதற் கப்பால் பொன்முகலி ஓடுவதாக நாணன் கூறினன்.

என்றவர் கூற நோக்கித் திண்ணனூர் தண்ணீர் எங்கே நன்றுமிவ் வனத்தி லுன்ன தென்றுரை செய்ய நாண் நின்றவிப் பெரிய நேக்கி னப்புறஞ் சென்ரூல் கீண்ட குன்றினுக் கயலே ஓடும் குளிர்ந்தபொன் முகலி என்ரூன்

இப்பொழுதுதான் நம் எதிரில் சுட்டிக் காட்டுவது போல இருக்கின்றது இப்பேச்சு. "நின்ற இப்பெரிய தேக்கின் அப்புறம் சென்ரூல்" என்று சிறு புலவர்கள் பாடமாட்டார்கள். இவை எல்லாம் சிறிய நூட்பங்கள் என்று விலக்கிப் பெரியவற்றைப் பேசத் தொடங்குவார் கள். ஆனல் இச்சிறு குறிப்புக்கள்தான் கதையானது நம் எதிரே உண்மையாக நடப்பது போல மருட்டிக் கண் கட்டி வித்தை பண்ணுகின்றன. கதைப்போக்கிலே சேக்கிழாரும் ஒன்ருகி அமிழ்ந்துவிட்டார் என்பதை இவைதாம் விளக்குகின்றன. மலையும் மரமும் ஆறும் அருவியும் வழியும் மக்களும் எல்லாம் இவரது மனக் கண்ணுடியிலே பதிந்து மங்கலின்றித் தெளிவாகத் தோன்றுகின்றன. ஆகையால் சிறிய நூட்பங்களையும் சொல்ல முடிகின்றது.

"சரி, தண்ணீர் இருக்கிற இடத்திற்குப் போவோம். இத்தப் பன்றியை எடுத்துக் கொண்டு நடவுங்கள்" என்று சொல்லி நடந்தார் திண்ணனூர். அரைக்காவத தூரத்திலிருக்கும்போது காளத்தி மலையைக் கண்டார்.

பொங்கிய னெவில் வேடன்
சொன்னபின் போவோ மங்கே
இன்னிது தண்ணீக் கொண்டு
போதுமின் என்று தாமும்
அங்கது நோக்கிச் சென்ரூர்
காளத மலையிற் கண்டார்
செங்கணே நடையார் வைகும்
திருமலைச் சாரற் சோலை.

மலையைப் பார்த்தார். என்றும் பாராதமலை. அதனைப் போய்ப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் உண்டா யிற்று. நாணனும் கல்லது அங்குப் போகலாம் என்ரூன். காட்சியும் கன்ரூக இருக்கும் என்று பசியை மறக்கச் செய்யும் இயற்கையினிடத்துத் தனக்கும் தனது ஆண்ட வனுக்கும் உள்ள விருப்பினைக் காட்டினன். "மலை மேலே குடுமித்தேவர் இருக்கிரூர் என்று தெரிவித்தான் "போய்க் கும்பிடலாம்" என்று வழியும் காட்டினன்.

நாணனே தோன்றும் குன்றில்
நண்ணுவேம் என்ன நாணன்
காணநீ போதில் நல்ல
காட்சியே காணும் இத்தச்
சேணுயர் திருக்கா ளத்தி
மலேமிசை எழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவர்
இருப்பர்கும் பிடலாம் என்ரூன்.

இதற்குன் திண்ணனூருக்கு ஒரு புத்தியிர் வந்தது. "அத் தேவரைப் போய்ப் பார்க்கலாம் மேலே நடவுங்கள்" என்ரூர். திருமுகலிக் கரையை அடைந்தார்கள்.

உரைசெய்த விரைந்து செல்ல
அவர்களும் உடனே போந்து
கரைவளர் கழையின் முத்தம்
காரில் குறடும் சந்தும்
வரைதரு மணியும் பொன்னும்
வயிரமும் புளினந் தோறும்
நிரைகண்முன் நிரட்டி வைத்த
திருமுக லியினைச் சார்ந்தார்.

காடனிடம் பன்றியை ஒப்படைத்து, நிரும்பி வருவதற் குன் நீக்கடைந்து மூட்டும்படி சொல்லிவிட்டு நாணனும் திண்ணனூரும் மலேயேறிச் சென்ரூர்கள்.

ஆக்கதன் கரையின் பாங்கோ
ரணிநிழற் கேழ லிட்டு
வாங்குவிற் காடன் தன்னை
மாக்கடை நீக்கோல் பண்ணி
ஈங்குநீ கெருப்புக் காண்பாய்
இம்மலே ஏறிக் கண்டு
காங்கள்வந் தணைவோம் என்று
நாணனும் தாமும் போனர்.

ஆற்றையும் கரையையும் மனம் அமைதியுற அழகாகப் புகழ்கின்ரூர் சேக்கிழார்.

அளிமிடை கரைசூழ் சோலை
அலர்கள்கொண் டணைந்த ஆற்றின்
தெளிபுன லிழிந்த சித்தை
தெளிவுதும் திண்ண னூர்தாம்
களிவரு மனிழ்ச்சி பொங்கக்
காளத்தி கண்டு கொண்டு
குளிர்வரு நதியு டேகிக்
குலவரைச் சாரல் சேர்ந்தார்.

பூக்களின் நிருமணமும், தெளிந்தோடும் ஆற்றின் நீரின் அழகிய காட்சியும், மனதைக் கரைக்கும் மலேயின் மாட் சியும், வெய்யலில் வாடுவோர் நில் எனக் குளிர்ந்தோ டும் நீரில் நடப்பதால்வரும் ஊற்றின்பமும் பேரின்பத் நிற்கு வழி காட்டியதில் வியப்பொன்று மில்லே என்பது போலப் புனைந்துரைத்தல் காண்க.

தேவ தந்துபியின் முழக்கம் கேட்டது. பைதாகாஸ் என்ற யவன அறிஞர் உலகங்கள் சுற்றுகையில் ஓர் இனிய ஓசை எழுகின்றது, அதனை அறிஞர் கேட்டு இன்புறுகின்றனர் என்கின்ரூர். நிருக்களித்துப் படி யார்.

ஓசைஎலாம் அற்ரூல் ஒலிக்கும் நிருச்சிலம்பின்
ஓசைவழியே சென்ரொத் தொடுங்கில் - ஓசையினி
லந்தத்தா னத்தா னரிவையுட னம்பலத்தே
வந்தொத்தா னத்தான் மகிழ்ந்து.

(நிருச்சிலம்போசை)

ஒலி வழியே சென்று நிருத்தனைக் கும்பிடென்றுத் தீபற-கோப்பட வங்கே நின்றுத் தீபற என்பதற்கிணங்க இவ்வோசை வழியே சென்று இறைவனே அடைகின் ரூர் திண்ணனூர். இவ்வினிய ஒலியைக் கேட்டதும் "தென்ன என்ரூர். "தேன் கூட்டில் தேனீக்கள் ரீங்காரம் செய்கின்றன போலும்" என்ரூன் நாணன். இங்கும் ஒரு பொருளே பலர்க்கும் பலவாறு தோன் றுவது காண்க.! தம் முணர்வற்று நிற்கும் நிலையில் இத்தகைய ஒலிகள் கேட்பதைப் பற்றி மேனாட்டா ரும் கூறுகின்றனர். பின்னர்த் திண்ணனூர் குடுமித் தேவரைக் கண்டார், தழுவினர். மோந்தார். காளத் நியாரைக் கண்டதும் கண்ணப்பர் தம்மை மறந்து நின்ற நிலையைக் கண்கூடாகக் கண்ட நாணனே நமக் குக் காட்டுகின்ரூர் சேக்கிழார். அவன் ஒரு சான்று. அம்மட்டுமா? முன்னே நாம் சொல்லியதுபோலக் கட்புல னுக்குக் கடவுளைக் காட்டும் சட்டகத்தை இதுதான் கடவுள் எனச் சுட்டிக்காட்ட ஒருவர் வேண்டும். இந்த வகையிலே நாணனே இவர்க்குக் குருவின்றே சொல்ல லாம். இறைவன்மேலே பச்சிலையும் தண்ணீரும் இருக்கக் கண்டு "எதென்ரூர்" திண்ணனூர். 'நானறிவேன்' என்ரூன் நாணன்.

கைச்சில விழுந்த தோரார் காலையார் மீன இத்தப்
பச்சில யோடு பூவும் பறித்திட்டு நீரும் வார்த்து
மச்சித செய்தார் யாரோ என்றலு மருங்கு நின்ற
அச்சில நாணன்தானும் நானித அறிந்தேன் என்பான்.
வன்கிற லுக்தை யோடும் மாவேட்டை யாடிப் பண்டிக்
குன்றிடை வந்தோமாகக் குளிர்க்தநீ ரிவையாட்டி[பான்
ஒன்றிய இலேப்பூச் சூட்டி ஊட்டிமுன் பறைக்தோர் பார்ப்
அன்றிதசெய்தான் இன்றமவன்செய்ததாரும் என்ரூன்.

அதுவே குரு உபதேசமாயிற்று என்கின்ரூர் சேக் கிழார்.

உண்ணிறைக் தெழுக்தநேரும் ஒழிலின்றி ஆரா அன்பில் திண்ணனூர் நிருக்காளத்தி காயனூர்க்கினிய செய்கை எண்ணிய இவைகொலாம் என்றித கடைப்பிடித்துச் [கொண்டல்
அண்ணலேப் பிரிய மாட்டா தனவிலா நரவு நீட.

என்று மேலே கதையைச் சொல்லிக்கொண்டு போகி ரூர். T. P. மீனாக்ஷிசுந்தரன்.

எபிகியூரன், ஜீனோன், பைரோன்.

எபிகியூரன் (கி. மு 341-270) என்பவர், தன் தாயா ரின் மூடபக்தியையும் ஆசாரங்களையும் கண்டு, தெமோகிருதனின் தத்வக் கொள்கைகளைப் படித்து யோசிக்கையில், மத விஷயங்கள்மீது ஐயமும் வெறுப் பும் உண்டாகி, மரணத்திற்குப்பின் சேரிடும் சம்பவங் களும், பற்பல தேவதைகளைப் பற்றிக் கற்பிக்கப்பட்ட புனையுரைகளின் மீதுள்ள குருட்டு நம்பிக்கையும் பய வுணர்ச்சியுமே மார்தரின் அல்லல்களுக்கெல்லாம் மூலக் காரணமெனவும், இன்ப நுகர்ச்சிக்கும் சுக ஜீவனத் திற்கும் தடைக ளெனவுந் தெளிந்து, தத்வ விசாரணை யில் தன் மனத்தைச் செலுத்தினர். இவரும் இவரைச் சார்ந்தவர்களும் லோகாயதர்க ளெனப்படுவர்.

ஜீனோன் (கி. மு. 340-265) என்றவர், முதலில் ஆதென்ஸ்மா நகரில் வர்த்தகரா யிருந்துவருகையில் கைதி செய்யப்பட்டு, பின் விடுதலே பெற்று, தத்வக் ஞரின் சித்தாக்தங்களைப் பழுதறத் தெரிந்து, மேலா ராய்ச்சி செய்து, கடையில், சிறிலை நூதன முடிபு களுக்கு வந்தனர். இவரும் இவர் கொள்கைகளைத் தொடர்ந்து விரித்தவர்களும் ஸ்வாக்கிய ரெனப்படுவர்.

பைரோன் (கி.மு. 365-275) என்றவர், தத்வஞானி களின் பலதிறப்பட்டும் ஒன்றற்கொன்று முரண்பா டுற்றும் விளங்கிய பூர்வ நூற்றுக்களைப் பரிசிலனை செய்து, எவ்விஷயத்தையும் மாறுபடா உறுதியாகவும் நிச்சயமாகவும் அறியமுடியா நாதலால், ஒரு நிலையான சாதனைகளில் எவரும் உழலக்கூடாதெனக் கொண்டவர். இவரும் இவர் வாதங்களைப் புதுக்கிப் பெருக்கியவரும் சம்சயவாதிக ளெனப்படுவர்.

பா தத்வக் கொள்கைகளைப்பற்றிய வரையிலும் இம் மூவர்க்கும் வித்தியாசங்கள் தோன்றினும், ஒரு விஷ யத்தை மாத்திரம் அவர்கள் அங்கிகரித்தார்கள். "அறி ரூன் தன்புரூன்; இவ்வுலகாதிகளினின்று யாதொரு லிபத்தும் அத்தகையவனுக்கு உண்டாவதில்லே" என்ற லோசாதனின் தனிலை இவர்களும் ஒப்பி, அறிஞனின் குணநிசயங்களே, (எத்தகைய ஞானம் அறவோனுக்கு வேண்டியது: அதாவது, எஞ்ஞானத்தினின்று மனே ஸாந்தியும் இன்பமும் உண்டாவன, வென்பதைப்பற்றி) பரியாலோசித்தறிய வாரம்பித்தனர். இவ்வுலகாதிகளில் தலேயிட்டு அலேப்புறுது சுமையுர் தயையுமுடைத்தாய், சுயச் சுதந்தரத்துடன் வினங்குபவனே ஞானி, அற வோன்; புறப்பொருள்களில் தன் மனத்தைச் செலுத் தாது, புறவிஷயங்களாற் பீடிக்கப்படாது, புறவிழ்ச்சி களி லீடுபடாது, அகச்சீர்மையை ஒளிரச் செய்பவனே மேலோன் - ராஜன் - தெய்வம். காட்சி யுலகைத் தன் இஷ்டப்படிக்கு மடத்துதற்கான ஆற்றலுடைய வல்ல னனும், அவுலகை அறிக்துணர்க்து ஒழுங்குபடுத்தற் கான நிறமையுடையவன் மனிதன். உலகாதிகளும் வாழ்க்கையும் நம்முன் எண்ணிறந்த ஆசைகளையும் உணர்ச்சிகளையும் எழுப்பி, நம்மைக் கலக்குகின்றன. பிரேமைகள், அல்லது பாசங்கள் என்பன நம்முடைய சுவபாவத்தின் மலினங்களாவன. ஆதலால், இப்பாசங் களை அடக்குதல், அல்லது நிருத்தலே ஞானத்தின் லக்ஷணமாகும்; கேவல பாசங்களாற் சலிக்கப்பட்டு முறை பிறழாநிருத்தலே ஞானத்தின் நற்பயனுகும்.

எபிகியூரன்.

சுகானுபவமே - இன்பமே மிக்க உயரிய நன்மை யென எபிகியூரன் ஒப்பியவராயினும், ஒவ்வொரு விசாடி யும் அற்ப சுகபோகங்களா விழுக்கப்பட்டுத் தத்தளிப் பதில்லை; ஆனல், எப்பொழுதும் ஒரு படிக்காக அகத் நிருப்தி, அல்லது மனுவமைதி பெற்றிருத்தலிற்முன் மெய்யின்பம் உளது எனக் கொண்டவர். சகல சுக போகங்களையும் இச்சித்துக் கெட்டுத் நிரியக் கூடா தெனக் கொண்டவராஞலும், முற்றத் துறவைப் போதித்தவரல்ல. ஒவ்வொரு வஸ்துவிலும், விகழ்ச்சி யிலும், அனுபவத்திலும் சுகதுக்கங்க ளிருக்கின் றன. மேலும், சுகமும் துக்கமும், பல விதங்களில், பல அளவுகளில் வெளித்தோன்றுவன. ஆதலால், அவை களினின்று அற்பசுகத்தையும் அதிக துன்பத்தையும் பயப்பனவைகளைப் பிரித்து நீக்கி, பெருஞ்சுகத்தை - நிலைத்த இன்பத்தை யளிக்கக் கூடியவைகளைத் தேர்ந் தெடுத்துப் பற்றி யொழுகுதலே சாலவுன்று. வேட்கை விருப்பம் இச்சைகள் என்ற மூன்று பாருபாடுகளுடை யது இன்பம். முதலாவது யாதெனில், உயிர் வாழ்க் கைக்கு இன்றியமையாத சாதனங்களின் மீதுள்ள ஆசையாம்; அறிஞரோ - மெளட்டியரோ, புண்ணியரோ - பாபிகளோ யாவராலும் பற்றப்படுவனவாம். பின்னவை

யாதெனில், இன்று உலாவி நாளையுலரும் பேர் புகழ் கீர்த்தி முதலான ஆடம்பரங்களைத் தொடரச்செய்து கெடுப்பனவாம்; இவைகள் அறிஞரால் வேண்டப்படுவன வல்ல. இவைகளின் தாரதம்மியங்களைப் பகுத்துணர்ந் தறியவேண்டும். சுருக்கத்தில், எச்சுகவின்பங்களைக் கொண்டு ஒழுகினலும், உட்கலக்கம் மனேவியாகூலம் உன்னத் தளர்ச்சி எய்தக் கூடாது; அதாவது, அவற்றிற் குக் காரணமானவைகளைக் கைவிடவேண்டும். சரீர சுகாதபவத்தைவிட மிக்க சிறப்புற்றது ஆழ்ந்து பரந்த மனப் பயிற்சியால் கிடைக்கப் பெற்றுன்ன உள்ளின்பம், அல்லது அகச் சாந்தியேயாம். அதாவது, ஞான அற விஷயங்களைச் சதாகாலமும் தேடித் திருவிப் பார்த்து, அலைவதல்ல; ஆனல், இஷ்டமித்திர பந்துக் களுடன் அன்னியோன்னியமாகப் பழகிக் குதூகலித்தலே, தன் கருத்து நிறைவேற்றத்திற்கு விரோதமானவை களைப் புறக்கணித்து, ஏற்றவைகளை உய்த்துணர்ந்து பற்றி யொழுகுதலே, இவ்வாறு ஒழுகித் திருப்தியில் தோய்ந்திருத்தலே மெய்யின்பம். இதற்கு எழிற்கலைப் பயிற்சியும் தக்க உதவி புரிவன.

இவ்வுலகாதிகளின் மெய்யியல்பையும் கருத்தையும் போக்குக்களையும் பற்றி நிர்ணயிக்க நம்மாலாகாது. ஒரு கால், அவைகள் நம்முன் எழுப்பும் உணர்ச்சிகளின் மாறு தல்களையும் நிலைமையையும் சிறிது அறியலாம். பிர பஞ்சாதிகளின் மெய்யியல்பைப் பற்றிய நிடஞானம் இல்லையானல், அவைகளுக்கும் நமக்குமுள்ள சம்பந்தத் தையும், நம் செயல்களிலிருந்து எந்நன்மை அல்லது எப்பயன் உண்டாகக் கூடும் என்பதையும் பற்றி உறுதி கூற முடியா தென்பது தெளிவாகின்ற தல்லவா? ஆதலால், அந்நிலையையும் இவ்வுண்மையையும் அறிஞன் அறிந்து, பிறர் போக்கையும் அபிப்பிராயங்களையும் தழுவி யொழுகாது, ஒழுகப் பிரயத்தனிக்காது, வானா இருப்பவன், இருக்கவேண்டும். குற்றங் குறைகள் பூரிக் கப் பெற்றுன்ன மனத்தைக் கொண்டு இப்பிரபஞ்சாதி களைச் "சீர்தூக்கிப் பார்த்து" விபரீத முடிபுகளுக்கு வருதலினின் றல்லவோ ஆசாபாசங்க ளெழும்பித் நீமை யும் பிழையுஞ் செறிந்த செய்கைகளில் நம்மைப் புகுத்தி வருத்துகின்றன. ஒவ்வொன்றையும் பார்த்து நிம்மதியா யிருத்துவிடின் சம்மை, வேட்கை விருப்பம் இச்சை முதலானவைகள் சுவரா, செயல்கள் பீடிக்கா. இவ்வாறு போதித்தவர் பைரோன்.

ஜீனேனின் கொள்கைகளை இனி விசாரிப்போம். வெளிப்பொருள்கள் புலன்கள் வாயிலாக உட்சென்று காட்சியறிவைப் பெருக்க, இக்காட்சி யறிவு இச்சாசக்தி (Will)யால் செயல்களாக வெளிப்படுகின்றது. ஆன்மா வின் முக்கியதொழில், காட்சியறிவை உண்டுபண்ணுவ தாலும், புலன்களின் னெர்ச்சிகளை, காட்சி யறிவின் உணர்ச்சிகளைக்கொண்டு, அவைகளுக்கு இணங்கி யிழி த்து நிறையளித் பிரவிர்த்திக்கின்றது. எனினும், இப் பல்வேறு னெர்ச்சிகளையும் உணர்ச்சிகளையும் நெறிபித்து ஒன்றுபடுத்தி உயர்த்துவது புத்தியாகும் (Reason). புலன்கள் னெர்த்து, பிரேமைகளுக்குட்பட்டு மயங்கித் தடிக்காவண்ணம் அறிஞன் தன் புத்தி வளப்பத்தினு லும் வன்மையாலும் அவைகளை எதிர்த்து அடக்கவேண் டும்; அதாவது, அவைகளின் இழிய ஆக்ஞைகளுக் கிடங்கொடுத்துத் தொழில்களில் பிரவேயொ நிருக்க வேண்டும். உலகை ஜயித்தலாவது, தன்னுள் பூரித்த நின்ற, நிமிஷந்தோறும் நீதி யெழும் ஆசாபாசங்களின் மும்முரத்தை அடக்குதலேயாம். பிரேமைகளின் ஆட்சி வயப் படாநிருத்தலே அறம், அல்லது இன்பம் என்பது. ஆசைகளின் அடிமை யாவதினின்றே இன்ன லிடர்கள் சம்மைச் சூழ்ந்து பிணித்துக் கெடுத்து அழிக்கின்றன. சுருக்கத்தில், பிரேமைகள் புத்தியினுடைய ஆதிக்கியத் துள் அடங்கி நிற்கும் நிலையே அறநிலை; புத்தியானது பிரேமைகளின் ஊழியனுகி யழியும் நிலையே மறநிலை.

அறவாழ்க்கையே மிக உயரியது. அறம், அல்லது நன்மை அனிமித்தமே விரும்பிப் பற்றப்படவேண்டும். கர்மம் கர்மத்தினிமித்தமே இயற்றப்படவேண்டும்; ஆரோக்கியம் செல்வம் புகழ் சுகங்களின் பொருட் டுத் தழுவப்படக் கூடாது. மேலும், நன்மை என்பது ஈற் றெழிலேற்று இயற்றி விடுவதில் மாத்திரமல்ல; ஆனல், அகம் புறம், சிந்தனை சொற்க னெல்லாவற்றிலும் அது சுயமாகத் திகழவேண்டும். நன்மை, அல்லது அறம் என் பது ஏகம்; அதாவது, ஒன்றில், அல்லது ஒன்றுக்கு நன்மை பொருந்திப் பயப்பதாயும், பிறவற்றில், அல்லது பிறவற்றிற்குத் நீமை நிறைந்து விளைப்பதாயும், விளங்கு வதல்ல. ஞானம் வீரம் அடக்கம் நீதி என்பன அதனின் அம்சங்களாம். இவைகளிலேதேனு மொன்றை ஒருவன் பெற்றிருப்பின், விஞ்சி நிற்பவைகளையும் அவன் உடைத்தாயிருப்பதாகக் கொள்ளலாம்; அவைகளி லேதேனுமொன்று குறையின், அல்லது இல்லாவிடின் மற்றவைகளும் அவனிடம் இல்லையெனவே கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஆன்மாவும் முழுத்தியனுகவோ, அல்லது பூரண சுலேனுகவோ இருந்து வருகிறன்; நன்மை நீமைகளுக் கிடையில், படுத்தாக் குணம், அல்லது பின்னதைத் தாய்மைப் படுத்தி முன்னதுடன் இணக்குவிக்கும் குணம், அல்லது சக்தி இல்லை. பிரே மைகளின் இழிவையும். அபிப்பிராயங்களின் சலனத்தை யும் அற்பத்தன்மையையும் அறிந்தவனே இன்பம்பெற்று அனுபவிப்பவன்; அவனே சுதந்திரன்; வெளிப்பகட்டுக் களால் மயக்கப்படாதவன்; அகப்போராட்டங்களால் தளர்வுறுதவன்; எது நேரிடினும் அவன் கலக்கமுறுன்; புத்தி - தெய்விகத்வம் - நற்பயன் என்றவைகளுக்குச் சரியான இயற்கை - விதி, அல்லது முறைமைகள் படிக்கு யாவும் உண்டாகிப் பெருகித் தேய்ந்து மறைவன என உணர்ந்து, எதற்கும் அஞ்சாதிருப்பவன். இயற்கை யின் முடிவு நன்மையே யாதலால், ஒவ்வொரு ஜீவான் மாவும் இயற்கை முறையை அறிந்து, அநுசரித்து ஒழுக வேண்டும்.

நீமை என்பது என்னை? இவ்வுலகில், அது நிலவி வருவதேன்? இவைகளைப்பற்றி ஆலோசனைசெய்த எபிகி யூரன் பழைய மதமுடிபுகளை யெல்லாம் பரிகரித்துத் தவிர்த்தனன். சர்வ நன்மை பூர்ணஞானம் போ னந்தம் ததும்பப்பெற்ற மூலவஸ்துவால் இப்பிரபஞ் சாதிகள் படைக்கப் பட்டன வெனின், பேதைமையும் ஏக்கம் வலி வருத்தங்களும் ஏன்? எவ்வாறு உண்டாயின்? கொதிக்கும் பாலைவனங்கள், பனி மலைகள், வியாதி களுக்கு அதுகூலமான சேற்று நிலங்கள், கூரிய முட்கள், கடும்புயல், சுழற்காற்று, பயங்கர மிருகங்கள், அபாயகர நோய்கள், அகால மரணங்கள் முதலானவைகளையும், சிரியர் தக்கிப்பதையும், பெச்சருர் தச்சரும் இனித்து வருவதையும் பார்க்கும்பொழுது, உண்மையில், சர்வ வல்லமையும் சர்வ அறிவும் சர்வ மங்களமும் நிரம்பிய தெய்வத்தால் இப் பிரபஞ்சம் சிருஷ்டிக்கப் பட்டன தல்லவென்பது, உள்ளங்கைக் கனிபோல், தென்னிதின் விளங்கும். மாற்காரனைவரும் ஒரு தெய் வத்தையோ, அல்லது பல தெய்வங்களையோ நம்பி வருவதால், அத்தெய்வங்களிருந்து வரலாம். ஆனல், மேற்காட்டிய நற்குணங்கள் நிறையப் பெற்றவர்களல்ல அத்தெய்வங்க ளென்பதை அறிய வேண்டும். காலுக்கு நான் வியாபித்து வரும் நீமைகளே இதற்குத் தக்க

சான்று பகர்வனபோலும். சர்வ சக்தி உறைவிட மும் - திருபா நிதியுமாக வினங்கும் கடவுள் திருவ் டியில், கொடுந் நீமைகளும் பரலி நிற்பதைப் பார்க்கை யில், "உண்மையில், அப்பரம்பொருள் சர்வசக்தி யுடைய ராயின், அக்கொடுமைகளை அழித்திருக்கவேண்டும்; அழிக்காததால், சர்வசக்திமானல்ல. நிரிகால ஞானியா யின், நானாவிர்த்தியில் நீமைகளுக் னெம்பி அல்லால கல்லாலப்படுத்து மென்பதை முன்னமே பறிந்து, தக்க செய்திருக்கவேண்டும்; செய்யாததால், பூர்ண ஞானமுடையவரல்ல. அருட்கடலாலுலும், நீமைகளைப் போக்கச் சக்தி பொருந்தியவராலுலும், மனமில்லாமை யினுல், அவ்வாறு செய்யவில்லை போலுமெனக் கொள் ளின், அத்தகைய குரூபியைப்பற்றி நாம் நினைக்கவும் வேண்டியதில்லை. ஆதலால், ஜபதப பூஜை முதலான வைக னெல்லாம் நிஷ்பிரயோஜனமானவை, வீணர்க ளின் பொழுது போக்குக்களே" என்ற விஷயங்கள் தெளிவாகும்.

இன்னமும், மரித்தபின் படுநரகத்தன் அழுத்தப் படுவோம், அல்லது சொர்க்கத்தி லமர்த்தப்படுவோம் என்ற கற்பனைகளை விட்டு ஒழிக்கவேண்டும். நாரிய தல்லிய வஸ்துவல்ல ஆன்மா; தேகமழிய அதுவும் அழிந்து விடுகின்றது. சரீர மொன்றில்லாது, தான் மாத்திரம் எதையும் ஆன்மா செய்யவல்லதல்ல. அந்தக் காரணங்கள், குழவிப் பருவத்தில் வலியற்றுக் கிடப் பன; யெனவன வயதில் பலமுற்றுப் பிரகாசிப்பன; விருத்தாப்பியத்தில், தேய்ந்து மழுங்கி அழிகின்றன. ஆன்மா என ஒன்று உடலிலிட்டுப் பறக்தோடுவதை ஒருவரும் காண்பதுமில்லை, உணர்வதுமில்லை. ஆன்மா நித்தியமானது என்ற பொய்க்கூற்றை மறப்போமாயின், மரணத்தைப் பற்றிய மனக்கலக்கமும் நிலையும் குறைந்து, அல்லது அற்றுப்போம். இறத்தவன் உணர்ச் னெனற்றுப்போவதால் அவனுக்கு மரிப்பு என்பது நீமை யல்ல; ஜீவித்திருக்கும் வரையிலும் மரணம் நெருங்கு வதுமில்லை யாதலால், உயிர்த் நிருப்பவர்களுக்கும் இறப்பு என்பது நீதல்ல; எவ்வாருயினும், அதைப்பற்றி ஆலோசித்து மனம்புழுங்கி செட்டியிர்த்து வாடக் காரண மில்லை.

ஜீனேன்.

ஜீனேனின் சித்தாந்தங்களாவன:—அறவோர்க்கும் அறப்பேர்க்கும் நீமை என்பது இல்லை; அதாவது, நியன வல்லாதவைகளைத் நியனவெனக்கொண்டு கவலைப்படுவ நில்லை. இன்னும், பிரபஞ்சத்தின் இறுதிப்பயன், அல் லது உன்னக்கருத்து நன்மையேயாதலால், அவ்வப் போது, இடையில், நியனபோலத் தோன்றுபவைக ளெல்லாம் கல்லனவாக மாறுவன. இன்னும், பிரஜை களின் கேமத்திற்காக ராஜாங்கத்தில் தண்டனைகள் விதிக்கப்பட் டிருப்பனபோல், ஜீவாகளின் சிர்மை நெறிப்பு இணக்கங்களுக்காகவே அத் "நீமைகள்" நிலவி நிற்கின்றன. இன்னும், நீமை என்பது இல்லாவிடில், நன்மையின் நெறிப்பு வினங்காது; குற்றமுங் குறைகளு மில்லாவிடில், அறம் ஞானம் என்றவைகளின் மேன் மை தெளிவாகாது. இவ்வாறு நீமையின் நன்மை, அல்லது பயனை இவர் வினக்கியிருக்கின்றர்.

சாகரத்தில் நீர்த் துளிபோலும், கொழுத்துவிட்டெரி யும் ஜ்வாலையின் நெருப்புப் பொரிபோலும், ஈச்வர உல கில் மானுடன் வினங்குகின்றன். நிரந்தரமான ஜடப் பொருளின் பகுதியாம் தேகம்; ஆன்மாவோ பரமான் மாவின் வெப்பமுன்ன வெளிச் சுவாசமாகும். இவ்வான் மாவும் ஜடத்வம் பொருந்தியிருத்தலினுற்றன் உட லுடன் கூடி இயங்குகின்றது. எனினும், சரீர அழி வுடன் ஆன்மாவும் அழிவதில்லை. நரகச் சொர்க்கங் களில்லாவிடினும், ஆன்மா, அதிலும் நல்லான்மா, மரித்தபின், அப்பால் தங்கியிருக்கின்றது. சர்வான்மாக் களும், யுகாந்தத்தில், அக்னியால் தகிக்கப்பட்டுப் பரமான்மாவுன் ஒடுங்குவன. கடவுள் ஒருவரே நித்யமு முடையவர்.

இவ்வுலகம் ஓர் ஜீவனன்று; அதின் ஆத்மா கடவுளாம். கடவுளுக்கு உருவம், அல்லது சரீரமுண்டு; இப்பிரபஞ் சமே அவருடைய சரீரமாகும்; அல்லது, கடவுளாகிய ஆன்மா பிரபஞ்சமாகிய தேகத்தைப் போர்த்து நிற்கின் றது போலும்.

காட்டினர் தொழுதவந்த பற்பல தெய்வங்களையும் தேவதைகளையும் ஜீனேனும் இவர் வர்க்கத்தவரும் வெறுத்துத் தூவித்தவர்களல்ல. எனினும், இவைக ளெல்லாம் பரமான்மாவின் அதிகாரத்துக்குட்பட்டு நடத்து, இறுதியில் மாய்வனவெனக் கொண்டிருந்தார் கள். மதாசாரங்களை இகழ்ந்து ஒதுக்கியவர்களல்ல.

பைரோன்.

சம்சயவாதிகளான பைரோன் - தைமன் - ஆர்ஸெஸி லான் (Arcesilans) - கார்னியாதின் (Corneads) முதலியவரின் கொள்கைகளைக் கவனிப்போம். எபிகி யூரனும் ஜீனேனும் பிரதிருதி சாஸ்திரப் பயிற்சியையும், பரதத்வ ஆராய்ச்சியையும் கண்டிருந்தபோதிலும், அவை களால் வாழ்க்கைக்குச் சில நன்மைகள் உண்டு - உண் டாகக் கூடும் என்ற விஷயத்தை மறக்கவில்லை. அச் சாஸ்திரங்கள் பரவஸ்துவின் இருப்பையும், உலகாதி களின் போக்கையும் உன்னக் கருத்தையும் செவ்வி தின் வலியுறுத்துவன என ஜீனேன் காட்டினர். வாழ்க் கைச் சுகபோக வின்பங்களைக் களங்கப்படுத்திக் குறைக் கும் மூடபக்தியையும் குருட்டு ஆசாரங்களையும் போக்க வல்லனவெனக் கொண்டவர் எபிகியூரன். ஆனல், பைரோன் என்பவரோ அவைகளின் பெருமையையும் உபயோகத்தையும் முற்றிலும் நிராகரித்தவர். தத்வப் பிரச்னைகளுன் ஒரு விஷயத்திலாவது ஞானிகளிருவர்க் குன் ஒற்றுமை ஏற்படுவதை அறிகிலோம். இவ்வாது, மெய்யின்பத்திற்குக் காரணமான மனத் திருப்தியை யளிப்பதற்குப் பதிலாக அவ்வாராயச்சிகள் வழக்கு, குழப்பம், தன்மறப்பு, ஆதாரமற்ற சாதனை, பொரு ளற்ற கூற்றுஇவைகளையே பெருக்குகின்றன. முடிவுறுத தர்க்கங்களுக்கிடங் கொடுப்பதால், அவ்வாராய்ச்சி உப யோகமில்லை; ஒவ்வொரு விஷயமும், ஒரே சமயத்தில், உனது - இலது என நிருபிக்கப்படுதற்கு இடந்தருவதால், நிச்சய அறிவு பெறுதல் கஷ்டசாத்தியமானது. விஷயாதி களின் மூலக்குணம் அகோசரமானது. ஆதலால், எதைப் பற்றியும் அதி உக்கிரத்துடன் வாதிக்கக்கூடாது; எதை யும் சுருதியில் அவ்கரிக்கவும் கூடாது, தள்ளவும் கூடாது; சுருக்கத்தில், ஒருதலை சார்பான உறுதி முடிபுகளுக்கு வருதலை நிறுத்தவேண்டும்.

இக்கோட்பாடுகளை முற்றிலும் ஒப்பியவர் ஆர்ஸெஸி லான். மூலதத்வ விஷயங்களைப் பற்றியவரையிலும் நிட அறிவு பெறுவதில்லை யென இவர்கள் போதித்த போதிலும், ஒழுக்கங்களில் அவ்வறிவு பெற்றிருக்கிறே மெனக் கொண்டிருந்தார்கள். ஆனல், இவ்விஷயத்தை யும் கீழ்க் காட்டியவர் மறுத்தனர்

கார்னியாதின்.

"கடவுள் சர்வஜ்ஞபகமாய் நிறைந்த ஏகன், அமலன், இணையிலான், சாதன், நித்தன், சுத்தன், சதந்தான்" என மேற்சொல்லிய வைராக்யர்களின் சித்தாந்தத்

தைக் கார்னியாதின் என்றவர் மறுத்துப் பின்வருமாறு தர்க்கித்தனர்:—ஆன்மாவைப் போல் கடவுளும் உணர்ச்சிகளுடையரா யிருக்கவேண்டும். உணர்ச்சிகள் மாறுமியல்புடையன; ஆதலால், கடவுளும் மாறிக்கொண்டிருப்பர் போலும். மாறுவன சீழடைத்து மழுங்கி அழியக்கூடும். ஆதலின், கடவுள் நித்ய புருஷரல்லர். இன்னும், கடவுளுக்கு அந்தமுண்டாயின், இவ்வுலகாதிகளிலோர் பாகமாவர், அதாவது சர்வத்வம் பொருந்திய வரல்ல; நிரந்தர அனந்தவஸ்துவாயின், மாறுதலற்று அசைவற்று உணர்ச்சிகளற்றுக் கிடப்பவர், அதாவது உயிர் வஸ்துவல்ல. இன்னும், கடவுளுளாயின், தேகம் பெற்றிருக்கவேண்டும்; இவ்வனமாயின், அழிபொருள்களி லொன்றுனவர்: தேகமொன் றில்லையாயின், ஞானியென்பதற்கில்லை. கடவுள் கருணைநிரம்பியவர் எனின், கருணைஎன்பது அவருக்கு வேறுன ஒரு வஸ்து, அல்லது குணமென்பதும், இக்குணத்தை அக்கடவுள் அணிகலமாகக் கொண்டு ஒளிர்பவர், அல்லது அதன் போக்கின் படிக்கு நடப்பவர் என்பதும் தெளிவாகின்றன; அதாவது, கடவுள் தன்னந் தனியாய், சர்வசக்தி உடைத்தாய் நிகரற்றுப் பிரகாசிப்ப ரல்ல: அல்லது விகாரி வென்போமாயின், கம்மைவிடச் சிறந்தவரல்ல. இவ்வாறே, கடமை உரிமை, நன்மை தீமை, அறம் மறம் என்பனவாதிகளைப்பற்றியும் வாதித்துத் தள்ளினர்!

இச்சம்சய வாதத்தின் காரணங்களைப் பின்வருமாது ஒருவர் விளக்கிக் காட்டி யிருக்கின்றனர்:—சீர உபாதிகளாலோ, அல்லது புத்திக் குறைவினுலோ ஒரே பொருள் பலவிதத் தோற்றங்களடைகின்றது. பொதுவாக, உன்னமைப்பையும் போக்கையும் ஒட்டியவரையிலும் இரு ஜீவன்களுக்குள்ளுட ஒற்றுமை எற்படுவதில்லை. ஒரே ஜீவனில் ஒரு புலனுக்கானவை மற்ற புலன்களுக்கு ஆதாதனவாயிருக்கின்றன; இதுபோலவே, தேகாரோக்கியத்திற்கும் சுக போகங்களுக்கும் வேண்டியவை மனே வளர்ச்சிக்குத் தகாதனவா யிருக்கின்றன. இன்னும், எஞ்ஞான்றும் சலிக்கும் நம்முடைய மனே நிலைமைக் கேற்றவாறு காட்சியறிவு, அல்லது புலனுணர்ச்சிகள் மாறுபடுகின்றன. அதே பொருள்கள் கனவில் ஒரு விதமாகவும், நனவில் ஒரு விதமாகவும், சுக நிலைமையில் ஒரு விதமாகவும், நோய் நிலையில் வேறுகவும், இளமையில் ஒரு விதமாகவும், விர்த்தாப்பியத்தில் மாறுகவும் தோன்றி வருகின்றன. இன்னும், இடம் தூரம் பக்க அமைப்பு முதலியவற்றுல் ஒரே பொருள் நானுவிதங்களில் காணப்பட்டு வருகின்றது. இன்னும், குணமும், அளவு அல்லது பருமனும் இணைந்து, ஒன்றையொன்று பிரதிபலிப்ப தல்ல. மேலும், கல்விப் பயிற்சியாலும், பாரம்பரியப் பழக்க வழக்கங்களாலும் அபிப்பிராயங்களும் சாதனைகளும் நூதன மடத்தைகளும் தோன்றி மறைத்து, பெருகிச் சென்றி மாறி வருகின்றன. இவ்விசுயங்களெல்லாம் சம்சய வாதத்திற்கு ஆதாரமும் பக்கபலமுமாவன போலும்.

T. R. இராஜகோபால்.

தமிழ்ப் பாடம் 42.

களவெண்பா

(809-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

எண்ணிய வெண்ண முடிப்ப விதல்வேற்கண்
கண்ணி யதையறிந்து காய்கலியும்—பண்ணினுக்குக்
கேளான தேமொழியை நீக்கிக் கிளரொளிசேர்
வாளாய் மருங்கிருந்தான் வந்து. 101.

பதப்பிரிவு:—எண்ணிய எண்ணம் முடிப்ப இகல் வேற்கண் கண்ணியதை அறிந்து காய் கலியும் பண்ணினுக்கு கேள் ஆன தேன் மொழியை நீக்கி கிளர் ஒளி சேர் வாளாய் மருங்கு இருந்தான் வந்து.

அன்வயம்:—காய் கலியும், இகல் வேற்கண் கண்ணியதை அறிந்து, பண்ணினுக்குக் கேள் ஆன தேன் மொழியை நீக்கி(தான்) எண்ணிய எண்ணம் முடிப்ப வந்து, கிளர் ஒளி சேர் வாளாய் மருங்கு இருந்தான்.

பதவுரை.

காய் - (யாவரையும்) வருத்துகின்ற
கலியும் - கலியும்,
இகல் - வெற்றிபொருந்திய
வேற்கண் - னாராசன்
கண்ணியதை - மினைத்ததை
அறிந்து - தெரிந்துகொண்டு,
பண்ணினுக்கு - இசைக்கு
கேள் ஆன - உறவாகிய
தேன் - தேன்போன்றினிய
மொழியை - சொற்களைப் பேசும் தமயந்தியை
நீக்கி - (அவளைவிட்டுப்) பிரித்து,
எண்ணிய - (தான் முன்னரே) எண்ணியுள்ள
எண்ணம் - எண்ணத்தை
முடிப்ப - (இப்பொழுது) முடித்துக் கொள்ளும் பொருட்டு
வந்து - அங்கு வந்து,
கிளர் - பிரகாசிக்கின்ற
ஒளி - ஒளியை
சேர் - உடைய
வாள் ஆய் - வாளின் உருவம் ஆகி
மருங்கு - பக்கத்தில்
இருந்தான் - இருந்தான்.

விரிவுரை:—'தமயந்தியை விட்டு நளனைப் பிரித்து வருத்துகின்றேன் பார்' என்று முன் வஞ்சினம் கூறியுள்ள கலி அதனை முடிப்பதற்கு இதுவே ஏற்ற சமயம் எனத் துணிந்து, ஒற்றை ஆடையை இருவரும் இருபுறத்திலும் பூணைந்திருக்கின்ற ராதலால் தமயந்தியின் துயிலைக் கலைக்காது அகலும்வகை யறியாமல் நிகைத்த நளனிற்கு முன்னே அக்கலி இப்பொழுது ஒரு வாளின் உருவெடுத்துக் கிடந்தான்.

"பண்ணினுக்குக் கேளான தேமொழி" என்று தமயந்தியைக் குறிப்பது, "பேசும் மொழிகளே பாட்டிற்கு நிகரான இனிமை வாய்ந்தவள்" என்னும் கருத்தையுடையது. கம்பரும், "எழிலிசை மடந்தையர் இன்சொல் இன்னிசை" என்பர்.

ஒற்றைத் தகிலு முயிரு மிரண்டாக
மூற்றுந்தன் னன்பை முதலோடும்—பற்றி
அரிந்தா னரிந்திட் டவணிலைமை நெஞ்சில்
தெரிந்தா னிருந்தான் நிகைத்து. 102.

பதப்பிரிவு:—ஒற்றை தகிலும் உயிரும் இரண்டு ஆக முற்றும் தன் அன்பை முதலோடும் பற்றி அரிந்தான் அரிந்திட்டு அவள் நிலைமை நெஞ்சில் தெரிந்தான் நிகைத்து.

அன்வயம்:—முற்றும் தன் அன்பை முதலோடும் பற்றி, ஒற்றைத் தகிலும் உயிரும் இரண்டாக அரிந்தான். அரிந்திட்டு அவள் நிலைமை நெஞ்சில் தெரிந்தான், நிகைத்து இருந்தான்.

பதவுரை.

முற்றும் - முழுர்கின்ற
தன் - தன்னுடைய
அன்பை - அன்பையே
முதலோடும் - மூலுதும்
பற்றி - தனக்கு ஊன்றுத் துணையாகப் பிடித்துக் கொண்டு,
ஒற்றை - ஒன்றுகிய
தகிலும் - வஸ்திரமும்
உயிரும் - உயிரும்
இரண்டு ஆக-இரண்டாகும்படி (நளன் அவைகளை)
அரிந்தான் - (அவ்வாளால்) வெட்டினுன்.
அரிந்திட்டு - வெட்டிவிட்டு
அவள் - தமயந்தியின்
நிலைமை - பரிதாபகரமான நிலைமையை
நெஞ்சில் - தன் மனதில்
தெரிந்தான் - உணர்ந்து
நிகைத்து - நிகைப்படைத்து
இருந்தான் - இருந்தான்.

விரிவுரை:—முன், இவ்விருவருக்கும் "ஆவிபோல் ஆடையும் ஒன்றுயதே" என்றதற்கேற்ப இக்கு அவை இரண்டையும் வேறுகப் பிரித்துக்கொண்டு நளன் போனுன் என்பதால் கதையோடு உவமையும் தொடர்கின்ற ரயம் தெரிந்து வினக்குகின்றது. நளன் அரிந்தது தகிலையும் உயிரையுமே, அன்பை அன்று. ஆதலால், "முற்றும் தன் அன்பை முதலோடும் பற்றி, அரிந்தான்" எனச் சேர்த்து, "முறிகின்ற தனது அன்பை வேரோடு பிடித்து வெட்டிவிட்டான்" என்று பொருள் கொள்ளப் படாது. கொண்டால் தமயந்தியின்பால் தனக்கிருந்த அன்பையெல்லாம் தைத்துவிட்டுப் போனுன் என்ற பழி நளனைச்சேரும். அவன்பால் இவனுக்கு அன்பு மேன்மேலும் முதிர்வதால்தான், அவனேனும் அல்லல் படாமல் தந்தையகம் சேர்ந்து வைகட்டும்என்னும் எண்ணம் பிறந்து, வலிந்தேனும் அவனைவிட்டுப் பிரிதலின் தகுநிலைக்கு இவ்வாறு செய்கின்றவன் ஆயினுன். ஆனுல், உயிரிற்கு உயிராய தமயந்தியைத் தனியே விட்டகல்வது நளனுக்குச் சுலபமல்ல. ஆதலால் அவனுக்கு இக்காரியம் செய்யப் பற்றுக்கோலாக ஒர் தினை வேண்டி யிருந்தது. அப்படி ஒரு கையால் பற்றி நின்ற மறுகையால் உயிரை அறுப்பதற்கு வகை தேடியபோது முதிர்ந்த அன்பே பற்றிநிற்கும் மாமாய் இவனுக்கு உதவியது என்பது இச்செய்யுளின் இரண்டாவது அடியின் கருத்து. அன்பைப் பற்றிக்கொண்டு, தகிலும் உயிரும் இரண்டாக அரிந்தான், என்று சேர்த்துக்கொள்வதே நலம்.

குறிப்பு:—(1) "ஒற்றைத் தகிலு முயிரும் இரண்டாக அரிந்தான்," என்பதில் புணர்நிலையணி என்னும் ஓர் அணி அடங்கி யிருக்கின்றது. இரண்டு வேறு வேறுன விஷயங்களை ஒன்றுய் ஒரு சொல்லைக்கொண்டு பொருந்தும்படி செய்வது இவ்வணியின் இலக்கணம். இதனுல், ஆடும் மாடும் வந்தன, நடப்பனும் தாயும் உண்டனர், என்றுரைப்பதெல்லாம் புணர்நிலை அணி யென எண்ணவேண்டா. புலவர் தம் திறத்தினுல் கேட்போருக்கு இனிமை உண்டாகும்படி சொல்வதுதான் அணி எனப்படும். ஆடும்மாடும்வந்தன என்பதில் புலமை ஒன்றும் இல்லை; ஆதலால் அணியும் இல்லை.

இரண்டு பொருள்கள் அணிபெறப் புணரும்போது அவை ஆடும் மாடும் வந்தன என்பதுபோல் நேராகப் பொருந்தாமல், ஒன்று உண்மையாகவும் மற்றது அதற்கு உவமை நிலைடை முதலியவைகளின் உதவியால் விகாரமாகவும் அமைந்து பொருந்துவது இயல்பு. ஒற்றைத் தகிலும் உயிரும் இரண்டாக அரிந்தான், என்ற இடத்தில் ஒற்றைத்தகில் இரண்டானது உண்மை; உயிர் இரண்டானதற்கு இத்தகில் இரண்டானதே உவமைபோல் கிற்கின்றது.

முன், "வாசம் மலர்ந்த தேங்கோதையான் ஆழ்துயரத்தோடு புலர்ந்ததே அற்றைப் பொழுது" என்ற சுயம்வரகாண்டம் 114-வது செய்யுளில் (428-வது பக்கம்) வந்திருப்பதும் இப் புணர்நிலையணிக்கு உதாரணமாம். புலர்ந்தது, என்னும் வினையிலே நேரான அர்த்தத்தில் அன்றிரவும், அதைப்போலத் தமயந்தியின் துயரமும் பொருந்த முடிகின்றன. இரவும் அவன் துயரும் ஒன்றுக விடிவதுபோல் இரண்டு செய்கைகள் ஒன்றுக நிகழ்வதால் இப் புணர்நிலையணிக்கு உடன் நிகழ்ச்சி அணி என்னும் பெயரும் உண்டு. இதனை வடமொழியில் ஸஹோக்தி என்பர்.

மைடதத்தில், நளனுக்குத் தமயந்தி மாலைசூட்டியதற்குப் பொறுக்காமல் மற்ற அரசர்களெல்லாரும் அவனோடு போர்புரிய வந்தனர் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அத்தப்போரிலே நளனுடையநிலையை வருணிக்கின்ற அதிவீராமபாண்டியன், "வன்னல்தன் புருவத்தோடும் வரிவிலை குனித்தனன்றே" என்று கூறியதிலும் புணர்நிலையணி அமைந்திருக்கக் காணலாம். கோபத்தால்வளைத்த அவன்புருவத்திற்கு நிகராகக் கையிலிருந்த வில்லும் சரமெய்ய வளைந்தது என்பது அதன்பொருள். வில்லும் புருவமும் வளைகின்றதாகிய அத்தொழில் உடன் நிகழ்வதால் இது உடன் நிகழ்ச்சி அல்லது புணர்நிலை அல்லது ஸஹோக்தி என்று சொல்லப்படும் அணி ஆகும்.

புணர்நிலையணி இருவிதம். ஒன்று வினைப்புணர்நிலை, மற்றது பண்புப்புணர்நிலை. இவைகளது பேர்களே குறிக்கின்றபடி, வேறு வேறுகிய இரண்டினை ஒரே வினையினுல் புணர்த்திப் பொருந்தக் கூறுவது வினைப்புணர்நிலை யணி ஆகும். "கோதையான் ஆழ்துயரத்தோடு அற்றைப்பொழுது விடிந்தது," என்னுங்கால் விடிதலென்னும் தொழிலைச் செய்வதாகிய வினையிலே துயரமும் பொழுதும் சேர்ந்து நிகழ்வதால் இது வினைப்புணர்நிலையணி என்பது தெரியவரும். அவ்வாறே, மைடதத்திலிருந்து காட்டிய உதாரணத்தில் நளன் வில்லும் புருவமும், வளைவதாகிய வினையைப்பற்றிச் சேர்ந்து நிகழ்கின்றன வாதலால், அதுவும் வினைப்புணர் நிலையே. கார் காலத்தில் திரும்பி வருவதாகச் சொல்லிப் பிரிந்துபோன நாயகன், கார் வந்தும் வரத் தாழ்வதற்கு ஆற்றுத மனைவியின் கண்கள் மழை முகிலோடு கீர் பொழிந்தன, எனக் கூறுவதும் வினைப் புணர்நிலை யணியாகும்.

இருவேறு பொருள்கள் ஒரே தொழிலில் பொருந்தி நிகழுமாயின் வினைப் புணர்நிலையணி ஆவது கண்டோம். அவ்விதமே, இரு வேறு பொருள்கள் ஒரே குணம் அல்லது பண்பினுல் பொருந்தக் கூறினுல் பண்புப் புணர்

நிலையணி தோன்றும். இக்கச் செய்யுளில் "தகிலும் உயிரும் இரண்டு ஆக அரிக்தான்" என்பதில், தகில் உயிர் என்னும் இவ்விரு பொருள்களும் இரண்டு ஆகுக் தன்மையில் சேர்ந்து பொருந்தின. ஆதலால் இதனை வினைப்புணர்நிலையணி என்பதைப் பார்க்கிலும் பண்புப்புணர்நிலையணி என்பதே ஏற்றதாகும். "மாலைக் காலமும் மடவான் உயிரும் வெட்மையவாய் நீண்டன," என்பதும் பண்புப் புணர்நிலையணிக்கு உதாரணம். வெம்மை, நீட்சி என்பன வினைகளல்ல; குணங்களாகும். இக்குணங்களை உடையதால் மாலையும் உயிரும் ஒரு தன்மையிற் பொருந்தின. ஆகையால் பண்புப் புணர்நிலை ஆயிற்று. நீண்டன என்று இங்கும், அரிக்தான் என்று முன் உதாரணத்திலும் வந்திருப்பன, வினைச் சொற்களா யிருந்தாலும், அவைகளில் அடங்கியுள்ள தொழிலின் நிமித்தம் அவ்விரு பொருள்களும் பொருந்தவில்லை என்பது ஊன்றிப் பார்த்தால் தெரிய வரும். ஆகையால் அவை வினைப்புணர்நிலை அணிகள் ஆகா. இச்செய்யுளில் இரண்டு என்னும் பண்பினாலும், பின் உதாரணத்தில் வெம்மை நீட்சி என்னுங் குணங்களினாலுமே பொருத்தம் ஏற்படுகின்ற நுட்பத்தை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

8. வேள்விப் படலம்.

(814-ம் பக்கத் தொடர்ச்சி.)

கோசிகன் நாணப் பேசிய படைக்கலம்.

அரக்கரால் நினைந்த இடர் நீர்ந்து தன் வேள்வியை மூற்றிய கோசிகன், வெண்ணெயில் வைகிய அண்ணல் தன் சொல்லேயன்ன படைக்கலங்களை இராமனுக்குத் தக்க மந்திரங்களோடு கற்பித்தருள அவை,

தேறிய மனத்தான் செய்த
நல்வினைப் பயன்க ளெல்லாம்
மாறிய பிறப்பிற் றேடி
வருவபோல் வந்த வன்றே

என்று கம்பர் தனக்குரிய வழக்கப்படி, பொருளே விளக்குவதல்லால் உவமையால் உண்மையுஞ் சில உணர்த்தும் வண்ணம் உரைத்துவைத்தார். நல்வினைப் பயன்கள் எல்லாம் மாறிய பிறப்பில் தேடி வருவதுபோல் அப் படைக்கலங்கள் இராமன்பால் வந்தன என்பதுமட்டுமே கூறினால் இங்குவேண்டிய உவமையின் அனவிற்குப் போதுமானாலும், கூட்டிய அவ்வுவமையுள் உண்மையை மறப்பதொண்ணுதனைக் கம்பர் தன் நுண்ணறிவின் நிறத்தினால் "தேறிய மனத்தான்செய்த நல்வினை" என்ற அந்நல்வினைக்கு இன்றியமையாத அடைமொழிகள் தொடுக்கலாயினர். ஆற்றுவோர் ஆற்றிய நல்வினைகளின் பயன் எவ்வாற்றானும் மறுபிறப்பில் தேடி வந்துதான் தீரவேண்டும் என்னும் நியதியில்லை. ஒரு பயனைப் பெறவேண்டும் என்னும் நினைவோடு அப்பயனைப் பெறுதற்கு ஏற்ற நல்வினையும் யாதெனத் தேர்ந்து கருமங்கள் இயற்றுவோர்க்கே அப்பயன் எய்தும். நிஷ்காம்யமாய்ச் செய்கின்ற கருமங்கள் நற் கருமங்களாயினும் அவை தமக்குரிய பயனோடு தொடர்பற்று ஆற்றுவோர் மனநின்கண் நிகழ்வதால் பின்னுள் பயனொன்றும் நிகழ்நிடா தென்னு மிது கருமயோகத்தின் காதாரமாய அருமைத் தத்துவம். ஆதலின், இராமனை இப்படைகள் வந்தடைந்த நிச்சயத்தை காட்டுதற்குத் 'தேறியமனத்தான் செய்த நல்வினை' என வரையறுத்து, அத்தகைய நல்வினையின் பயன்களே தேடி வருவதை எடுத்துக் காட்டும் புலமை எளிதில் விளங்கும்.

இன்னவாறு எய்திய தேவர்தம் படைகளின் ஆற்றலைப் பின் இம்முனிவனே, "காய்த்த எரின் உலகினைத்தும் கடலோடும் மலையோடும் நீய்த்த ஏறச் சுடுகிற்கும் படைக்கலங்கள்" என்று ஜனகவேந்தனுக்குக் கூறும் வாயிலாக அறிந்து கொள்ள இயலும். அன்னவை வந்து இராமன்பால் தங்கிய வண்ணம் ஈதெனக் கூறும் செய்யுளின் செம்பி சிறிது சிந்தித்தற் கொத்ததா யிருக்கின்றது :—

மேவினம் பிரித லாற்றேம்
வீரசீ விதியி னெம்மை
எவினை செய்து நிற்றும்
இளையவன் போல வென்று
தேவர்தம் படைகள் செப்பச்
செவ்விதென் றவனும் கோப்
பூவைபோல் நிறத்தி னுற்குப்
புறத்தொழில் புரித்த வன்றே.

[விரும்பி நாங்கள் உன்னிவந்து அடைந்தோம். இனி ஒருபோதும் உன்னிலிட்டுப் பிரியப் பொறுக்மாட்டோம். வீரனே, நீ முறைப்படி எங்களை எது செய்ய எவினும் அதனை நாங்கள் செய்ய உன் தம்பியைப் போல் காத்துக்கொண் டிருக்கின்றோம், என்று அத் தெய்வப்படைகள் சொல்லவே, அதற்கு இராமனும் 'நல்லது' என்று உடன்படவும், அவை காயாமலர் போன்ற நிறமுடைய இராமனுக்கு அன்றுமுதல் புறத்தில் நின்று தொழில் புரித்துவர லாயின]

ஆதலின், படைகளாய் வந்தவர் வம்பர்தாம் அடிமை போல் ஊழியத்திற் கமர்ந்திலர். நிது தருமத்திற்கு விரோதமாயிருப்பினும் தாடகையைக் கொல்லென்று கூறிய கோசென்றன் கொன்கைக்கு அஞ்னெபோல் அப்படைக்கலங்கள், "வீரசீ விதியின் எம்மை எவின செய்துநிற்றும்" என்று "தாடகையின்பால் நீ புண் பாணத்தை எய்ததுபோல் எம்மை முறை பிறழ்த்த எவ்வாயின் உன்னுடைய பணிக்கு யாம் இசையமாட்டோம்" என்பதைத் தெரிவித்துக் கொன்றன. அவற்ற அன்புதான் இவைகளுக்கு இராமன்பால் உளதேனும் அவ்வன்புபற்றி தெரியலா தெரியிற்றம்மை இராமன் உய்த்திடப் பொறுக்காத்தன்மையில் அப்படைக்கலங்கள் தம்மை இலக்குமணனோடு ஒப்புக் கூறிக் கொள்ளுதல், பின்னுள் இவன், வாலியைச் சாத்தின்று வெல்லுதற் கிசைந்த அண்ணனே வெறுத்தவச் செய்தியை நினைக்குங்கால், தக்கதேயாயிற் றென்பதற்கு ஐயமில்லை. இராமனும் இப்படைக்கலங்கள் வினைத்த வெலாம் தானும் வினைத்த அவைதாம் தன்னிடத்தில் எதிர்பார்க்கின்ற உறுதிமொழியைச் "செவ்வித" என்று சேர்ந்து அளித்தான். இராமனுக்கும் அப்படைகளுக்கும் இடையே எற்பட்ட உடன்படிக்கை இது. இவ்வுறுதியைப் பெற்ற பின்னரே அவை அவ்வீரனுக்குப் புறத்தொழில் புரியலாயின. முறை பிறழாது ஆற்றலே உய்த்தலே வீரத்தின் இலக்கணமாதலால் அவை இராமனை இங்கு 'வீர' என்று அழைப்பதிற்றானே இக் கருத்துத் தொனிக்கின்றது.

இன்னவாறு படைக்கலங்கள், "எம்மை நீ நெறி பிறழ்ந்து ஏவப்படாது" என்று கேட்பதும், அதற்கு இராமன் 'செவ்வித' என்று ஒருப்படுவதும் சேர்ந்த போது அருகிருந்த கோசிகனது மனநிலை என்னும்! தான் முன் தண்டிய வொரு செய்கையையே குறித்து இத்தெய்வப்படைகள், இனியொன்றும் அன்னவாறு நிகழாவண்ணம், இராமன்பால் உறுதிபெற முயல்கின்றன வென்பதை யோர்த்துணர்தற்கு வேண்டிய நுண்ணறிவு கோசிகனுக்குளது. "என்னையே வைவதற்கோ யானிப்படைகளை வரவழைத்தேன்" என்று தன்னுளே இவன் சிறிது சலித்துத்தான் இருத்தல்வேண்டும். நாணமே பூண்டு யாதும் கலிலாது கின்றான் முனிவன். இந்நிலையின் வாய்மை இதுவேயென்பது நம்முடைய நாடக உணர்ச்சியைக் கம்பர்தம் உணர்வினோடு இணைத்து நோக்கினால் மாத்திரம் தோன்றுமேயல்லாது, செய்யுளைக் கண்ணழித்துப் பதவுரை காண்பதோடு நின்றுவிட்டால் புலப்படாது. மற்று, அப்படைக்கலங்கள் 'விதியின்' என்றசொல்லால் காட்டிய கருத்தும், இராமன் 'நேர்'ப் புறத்தொழில் புரியலானதும், இவைகளைக் கேட்டிருந்த முனிவன் நாணுட்கொண்டதும் கலியின் இருதயத்திற்கு இயைந்தன வென்பதற் கையமில்லாவகையில்செய்யுள்கள் அமைந்திருக்கின்றனவோ, அல்லது அயல் கருத்தொன்றைக் கொண்டுபோய்க் கலியினுள் அடைக்கும் முயற்சியோ இதுவெனும் சங்கையும் அற்று நீங்க அக்கோசெனே பின், 'குலமுறை னெத்த படலத்தில்' இராமனுக்குத் தான் இப்படைக்கலங்கள் அளித்த செய்தியைச் சனகனுக்கு ஒதி வருகையில்,

ஆய்ந்தேற வுணர்ய்ய வயற்கேயு மறிவரிய
காய்ந்தேவி லுலகினைத்தும் கடலோடு மலையோடும்
நீய்ந்தேறச் சுடுகிற்கும் படைக்கலங்கள் செய்தவத்தால்
ஈய்ந்தேனு மனமுட்க விவற்கேவல் செய்குனவால்.

[ஜனகனே, நான் சொல்வதை யெல்லாம் என்று தேர்ந்துகொள். பிரம்மனுலும் அறிவதற்கு அருமையானவும், கோபித்து எவினுல் உலகம் முழுவதும் கடலோடும் மலையோடும் முடியத் தீய்ந்துபோகும்படி சுட்டழிக்கவல்லவுமாகிய படைக்கலங்கள், என் தவத்தின் வன்மையால் ஈந்தவனுகிய நானும் மனம் நானும்படி இவ்விராமனுக்கு அவை ஏவல் செய்கின்றன.]

என்று கபடமில்லாமல் வெள்ளையாய்ச் சொல்லக் கேட்கின்றோம். கோசிகன் நாணுதற்கு வேறெக்காரணம் உளது!

நாணின னுயினும் முனிவன் நம்பியை அழைத்துக் கொண்டு மேலினி படக்கலானன். அக்கவர் எகிய நெறியில் கோமதி நதியை கண்ண, அண்ணலும் வழக்கம்போல், "தாதி யாவதென்று" கோசெனை வினவுதலும், முனிவன் தன் தமக்கையாகிய கோதெை என்பான் இருசெனை மணந்து சென்னன் அறம் பொருள் இன்பமுற்றி வாழ்ந்தபின், காதலன் பிரம்மனுலகைச் சேர ஆகாய மார்க்கமாய் அகன்றபோது, பிரியத்தினியாத இவள் ஒரு நதியின் வடிவமாகி அவனைத் தொடர்ந்து படர்வளாக, அவன் "உலகத்தின் தன்பங்களை நீக்க நீ பூலோகத்திலேயே நதியாய் உலவுக" என்று பணித்ததற் கிணங்கிக் கோமதி நதியாய்ப் பாயவந்த வரலாற்றைச் செப்பினன். அதன் பின்னர் மூவரும் சிறிதுதாஞ் சென்றனர். அங்கு ஓர் இருண்ட சோலையைக் காண்டலும் இராமன் "யாது இது" வெனக் கேட்கச் சிறிது முன்னரே தன் முன்னவளின் கற்பின் பெருமையைக் கூறிய வினைவை யுடையவன் ஆதலால் விச்வாமித்திரன்,

தங்களு யகரிற் றெய்வந்
தவம்பிறி நிலவென் றெண்ணும்
மங்கைமார் சிற்தை போலத்
தாயது மற்றுங் கேளாய்
எங்களுன் மறைக்குந் தேவர்
அறிவிற்கும் பிறர்க்கு மெட்டாச்
செங்கண்மா லிருந்த மேனன்
செய்தவஞ் செய்த தன்றே

[தங்களுடைய நாயகரைப்பார்க்கிலும் தெய்வமேனும் தவமேனும் வேறு இல்லை என்று எண்ணும் கற்புடைய மங்கையர்கள் மனதைப்போலத் தாயது இச்சோலை. இன்னுங்கேள். நாங்கள் ஓதுகின்ற நான்கு வேதங்களுக்கும் தேவர்களுடைய அறிவிற்கும் வேறு யாருக்குமே எட்டாத நிருமால் இருந்து முன்னெருகாலத்தில் செய்வதற்குரிய தவத்தைச் செய்த இடம் இது]

என்று அக்கற்பினைக் கொண்டே இப்பொழிலின் தாய்மையை இராமனுக்கு விளக்கி வைக்கின்றனன். பைந்தளிரும் குருமலர்களும் குலவியோங்கத் தாங்கிய மணத்தின் பொறையால் மெல்லெனச் சிறகால் மருங்குலவ வெண்ணிலாப் பொழியும் தண்ணெனுஞ் சோலையின் கவின் பெறுவளன்களை உணரவல்லாராயின் தெய்வந் தொழா அன்கொழுனைத் தொழுதெழுகின்ற மங்கைமார் சிற்தையின் தண்மை இனிமை அழகு தாய்மை ஆகியவைகளையும் தேர்ந்துணர்ந்து நிறைந்த மனத்தவராவர். இவ்வுவமையின் சேர்க்கையால், செங்கண்மாலே தங்கித் தவஞ் செய்தற்கோரிடம் நாடுவானுயின் கற்பினுற் கனிந்த மாதார் சிற்தைபோல் தாய்மையாற் றெய்த சூழல் யாண்டுள தென்பதுபோல் இச்செய்யுள் அமைந்திருக்கின்றது.

செங்கண்மால் அருந்தவம் முயன்றபான்மை விச்வாமித்திரனுக்கு மிகுந்த வியப்பைத் தருகின்றது. தவங்களைச் செய்வதெல்லாம் அத்தவத்தால் அவாவிய ஒரு பயனைப் பெறுதலின் நிமித்தம் என்பதை யாவரும் அறிவார். மற்று, எவ்வகைப் பற்றுமற்ற மனநிலை பெற்றிருத்தலே பிறப்பிறப்பென்னும் பிணிப்பினின்று விடுதலையடைந்ததாம். அப்படிப் பற்றற்ற மனதுடையராக யாவரும் எக்காலும் ஒதிவது நாராயண என்னும் நாமம். ஆயின் மற்றவர் பற்றெலாம் படித்தவுடன் அகற்றவல்ல இக்காமத்திற்குரியஅச்செங்கண்மால்,எப்பயனைத் தானே பெறுதற்கு விழைந்தன பற்றுடைய பெருந்தவம் ஆற்றியிருத்தல் கூடும்! இவன் மாயம் இருந்தவாறு என்னே! என இன்னவாறு இறும்பூதெய்திய கோசிகன், இராமனுக்கு,

பாரின்பால் விசும்பின் பாலும்
பற்றறப் படிப்ப தன்னன்
பேரென்பா னவன்செய் மாயப்
பெரும்பிணைக் கொருகு தோர்வர்
ஆரென்பா னமல மூர்த்தி
கருதிய நதிக தேற்றும்
ஈரம்பா னுழி காலம்
இருந்தவ மியற்றி யிட்டான்.

[மண்ணுலகிலுள்ளோரும் விண்ணுலகிலுள்ளோரும் பற்றற்ற தனிப் பெருநிலை பெறுதல்பொருட்டு ஜபிப்பது அவனுடைய பேர். அவனே முன்னொன் நூறு ஊழிக் காலம் இங்கே அமர்ந்திருந்து அருமையான தவத்தைச் செய்தான். எதுகருதி அவன் இத்தவம் செய்தனனே அறியோம். அவன் செய்கின்ற செறித்தடர்ந்த மாயவ் களின் முழுவதையும் அறியவல்லார் ஆர்]

என்று எடுத்து விளம்பினன். திருமாலேன் தவம் நோற்தானென்று விச்வாமித்திரனேய முனிவரர் வியந் தரைப்பாராலுலும், இச் செங்கண்மால் மானுடவடிம் பூண்டு தவசியர் வேடம் தாங்கிக் கானிடை வதிந்த போது இராவணன் தங்கை கண்டு, "யாதும் கருதி இவன் தவத்தை மேற்கொண்டிலன். தவமே தன்னே இவன் செய்தல்வேண்டும் எனத் தவம்செய்து பெற் றுள வரத்தை நிறைவேற்றுங் கடமையே இதற்குக் கார ணம்" என்பதை எளிதில் ஓர்ந்து, "இந்களின நாட்டத் தான் தவன் செயத் தவம் செய்த தவன் என்" எனத் தவத்தின் தவப்பெருமையையே வியந்து நிற்கக் காண்கின்றேம்.

T. N. சேஷாசலம்.

வானசாஸ்திரம்.

(774-வது பக்கத் தொடர்ச்சி)

வெளிப்புறக் கிரகங்கள்.

சூரியனைச் சுற்றிவரும் கிரகங்களில் சூரியனுக்கும் பூமிக்கு மிடையிலிருக்கும் கிரகங்களே உட்புறக் கிரகங் கள் என்றும் பூமிக்கப்பாற் செல்லும் கிரகங்களே வெளிப் புறக் கிரகங்களென்றும் வருத்தோம். வெளிப்புறக் கிர கங்கள் செவ்வாய், வியாழன், சனி, யூரானஸ், நெப்டியூன் ஆகிய இவைகளே. இவற்றுள் செவ்வாய் நீங்கிய மற்றக் கிரகங்கள் மிகப் பிரமாண்டமான அண்டங்களாகவும் சூரியனிலிருந்து வெகு தூரத்தில் செல்கின்றனவாயு மிருக்கின்றன. இந்தக் காரணம்பற்றிக் கிரகங்களே இன்னொரு விதமாக வருத்திருக்கிறார்கள். புதன், வெள்ளி பூமி செவ்வாய் ஆகிய நான்கையும் பூமி ஒத்த கிரகங்கள் என்றும், எஞ்சியவற்றைப் பெரிய கிரகங் கள் என்றும் பிரித்துக் கூறுவது முண்டு. முன் கூறிய வகுப்பைச் சேர்ந்த கிரகங்கள் அமைப்பிலும் அளவிலும் பூமியை ஒத்திருக்கின்றன. பின் வகுப்புக் கிரகங்கள் மிகப் பெரிய அளவினவாயிருப்பது மல்லாமல் அமைப் பிலும் பூமியைப்போல இறுகித் தடித்தவைகளா யில்லா மல், உருவ நிலையில் இருப்பனவாய் இருக்கின்றன. இன்னுமொரு வேறுபாடு உளது. புதன் வெள்ளி பூமி செவ்வாய் ஆகிய நான்கு கிரகங்களும் சூரியனிலிருந்து 142,000,000 மைல் தூரத்துக்குள்ளிருக்கின்றன. செவ் வாய்க்கு அப்பாலிருக்கும் வியாழன் சூரியனிலிருந்து 484,000,000 மைலுக்கப்பாலிருக்கிறது. ஆகவே முதல் நான்கு கிரகங்களும் சூரியனுக்குச் சமீபத்திலும், பிற்கிய நான்கு கிரகங்கள் வெகு தூரத்திலு மிருக்கின்றன.

பூமிக்கு அடுத்திருக்கும் கிரகம் செவ்வாய். ஆனால் பூமிக்கும் செவ்வாய்க்கு மிடையில் சுரோஸ் என்னும் ஒரு சிறு கிரகம் இருக்கிறது. 1898 வருஷம் கண்டு பிடிக்கப்பட்ட இக்கிரகத்தின் ஒளியும் பதிந்தறி விருந்த வானசாஸ்திரிகள் இது இருப்பதை அறிந்தார் கள். இதை ஒரு கிரகமாக மதிப்பதற்கு முடியாது. மிகச் சிறிய அண்டமாயிருப்பதால் தாரதிருஷ்டியினுலும் அதைக் காண்பது கஷ்டம். அதன் குறுக்களவு இருபது மைலுக்கு மேற்படாது. இது சூரியனைச் சுற்றிவரும் பொழுது எக்காலத்திலும் பூமிக்கும் செவ்வாய்க்கு மிடையில் இருப்பதில்லை. இதன் பாதை செவ்வாயின் பாதைக்கு அப்பாலிலும் செல்கின்றது. ஆனால் செவ்வா யின் பாதையோடு ஒரேமட்டத்தி லில்லாதலினுல் இது செவ்வாயுடன் முட்டுவதில்லை. இத்தச் சிறு கிரகம் வான சாஸ்திரத்துக்கு ஒரு முக்கியமான உதவிபுரிகிறுக் கிறது. பூமிக்கும் சூரியனுக்கு மிடையிலுள்ள தூரத் தைக் கணிப்பதற்கு இது ஏற்ற வொரு சதவாயிருக் கிறது. இதன் மூலமாய்ச் சூரியனுக்கும் பூமிக்கு மிடையி லுள்ள தூரம் சரிவரக் கணிக்கப்பட்டிருக்கிறது.

செவ்வாய்.

செவ்வாய் பூமியைப்பார்க்கிலும் சிறியது. அதன் குறுக்களவு 4332 மைல் என்று கணக்கிட்டிருக்கிறார் கள். சூரியனுக்கும் செவ்வாய்க்கு மிடையிலுள்ள தூரம் 141,500,000 மைல். அதன் சுற்றோட்ட காலம் ஒரு வருஷமும் 313 நாளும். பூமியைப்போலச் செவ்வாயும் இருபத்துநாலுமணி நேரத்தில் சுழல்கின்றது. பூமியைப் போலவே அதன் பாதையின் மட்டத்துக்கு சோய் கில்லாமல் சற்றுச் சாய்ந்திருக்கிறது. ஆகவே செவ்வா யின் கால வித்தியாசங்கள் ஏறக்குறைய பூமியிலிருக்கும் கால வித்தியாசங்களே ஒத்திருக்கவேண்டும்.

இக்கிரகத்தை வாயுப்படலம் பூமியைச் சூழ்ந்திருப்பது போல் சூழ்ந்திருப்பதாகத் தெரியவில்லை. மிகவும் சொற்பமான வாயுப்படலம் இருப்பதாகவும் அதில் நீரா வியும் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். காியமல வாயுவே அதிகமாக இருக்கவேண்டுமென்பது துணிபு.

மற்றெல்லாக் கிரகங்களைப் பார்க்கிலும் வானசாஸ் திரிகள் மனதைக் கவரும் கிரகம் செவ்வாயே. தூர திருஷ்டி உண்டான காலமுதல் செவ்வாய் மிகவும் கவனமாய் எல்லா வானசாஸ்திரிகளாலும் பரிசோதிக் கப்பட்டு வருகிறது. இதற்குக் காரணம் செவ்வாயிலும் பூமியிற்போல உயிர் உள்ள பிராணிகள் இருக்கக் கூடுமோ வென்ற சந்தேகமே.

செவ்வாய் வெறும் கண்ணுக்குச் சிவப்பு நிறமுள்ள தாய்த் தோற்றுகிறது. தூரதிருஷ்டியின் மூலமாய்ப் பார் க்கும்போது சற்றுச் வெந்த நிறமுள்ளதாயும் இங்கு மங் கும் இடைக்கிடைப் பச்சை நீலநிறங்களுடைய பாகங்கள் உடையதாயும் தெரிகிறது. இரு திருவங்களும் வெண்மை நிறமுள்ளவைகளாகவும் இவ்வெண்மையான பாகம் கோடைக்காலத்தில் குறைந்தும் மாரிக்காலங்களில் விசா லித்தும் தோற்றுகிறது. இவைகளிலிருந்து சிவப்பு நிறமான பாகங்கள் தரையாயும் பச்சை நிறமான பாகங் கள் நீராயு மிருக்கவேண்டு மென்று ஒருகாலத்தில் எண் ணினுர்கள். ஆனால் இக்கொள்கைக்குச் சரியான ஆதா ரங்களில்லை. மேற்சொல்லப்பட்டவைகளைத் தவிர செவ் வாயில் காணப்படும் ஒரு முக்கியமான விஷயம் 'வாய்க் கால்கள்' போன்ற கோடுகள். 1877-ம் ஆண்டு ஸ்கியாப் பரெலி என்னும் இத்தாலிய வானசாஸ்திரி முதல்முதல் இந்த வரிகளைக் கவனித்து இவைகள் செவ்வாயின் மேற் பரப்பில் எங்கும் காணப்படுவதையும் இவ்வரிகள் ஆயிரக்கணக்கான மைல் நீளமுள்ளவைக ளென் பதையும் தெரியப்படுத்தினுர். அத்தான் முதலாக

இந்த 'வாய்க்கால்கள்' ஒவ்வொரு வானசாஸ்திரி களாலும் சோதிக்கப்பட்டு வருவது மன்றி, இவைகளைப் பற்றி வெவ்வேறு கொள்கைகளு மேற்பட்டிருக்கின் றன. இவ்வரிகளிற் சில 2000 மைலுக்குமேல் நீள முள்ளனவா யிருக்கின்றன. ஒன்று 3540 மைல் நீள முள்ளதென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இவைகளிற் சில இரட்டை வரியாய்க் காணப்படுகின்றன. இவ்வரி கள் இடையிடையே ஒன்றை ஒன்று சந்தித்து மறுபடி யும் பிரிந்து போகின்றன. இவைகளின் அகலம் இருபது மைலுக்கும் அறுபது மைலுக்கு மிடையிலிருக்கலாம். இவ்வரிகள் கோயிருப்பதனுலும் இரட்டை வரிகள் சமதூரத்தி லிருப்பதனுலும் இவைகள் இயற்கையாய் ஏற்படாமல் செயற்கை வரிகள் என்று எண்ணுவதற் கிட மிருக்கிறது. இதை ஆதாரமாகக் கொண்டே பூமியில் மனிதரைப் போன்ற பகுத்தறிவுள்ள பிராணிகள் செவ்வாயிலும் இருக்கவேண்டும் அல்லது இருந்திருக்க வேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள். இவ்வரிகள் நீர் வாய்க்கால்களும் அவ்வாய்க்கால்களின் அருகேவளரும் புல் பூண்டுகளுமாயிருக்கவேண்டு மென் பது சில சாஸ்திரிகளின் கொள்கை. இவைகளைப் பற்றி அனேக கொள்கைகள் இருக்கின்றன. அவைகளைத் தனித்தனியாய் இவ்விடம் எடுத்துச் சொல்ல விரியும்.

செவ்வாய்க்கு இரண்டு சந்திரர்கள் உண்டு. இவைகள் மிகச் சிறிய அண்டங்கள். இவைகளின் அளவைச் சரி யாய்க் கணக்கெடுக்க முடியாது. ஆனல் இவைகளின் குறுக்களவு இருபது மைலுக்கு மேற்படாதென்பது துணிபு. இவைகளில் ஒன்று செவ்வாயிலிருந்து 4000 மைலுக்கப்பால் நின்று 7½ மணி நேரத்திலும் மற்றது 12000 மைலுக்கப்பால் நின்று 30 மணி நேரத்திலும் செவ்வாயைச் சுற்றி வருகின்றன. அதாவது செவ்வாய் ஒரு முறை சுழலும்போது செவ்வாய்க்குச் சமீபத்தி லிருக்கும் சந்திரன் நாலுமுறை அதைச் சுற்றி வருகிறது.

அகப்பொருள் வரலாறு

(817-வது பக்கத் தொடர்ச்சி)

உடன்போக்கு.

இவ்வாறு அவன் தலைவியை உடன்கொண்டு தன்னு ரிற் சென்று தன் மனையில் ஏதுவையாற்றிப் பின் அவளுடன் மீண்டு வருதலன்றி, மணவினையை அக்கே முடிக்காது திரும்பி வந்து, தலைவியின் தாய் தந்தை யரால் தம்மகளுக்கு உரியவன் இவனேயென அங்கேரிக் கப்பெற்று, அவர்கள் மகட்கொடை சோ அவர்தம் மனை யில் அவளே மன்றலயர்த்து கொள்ளுமுண்டு.

இவ்விருவகையாய் இவ்வுடன்போக்கு முடிதலேயன்றி இடையே பின்வருமாறு தடைப்பட்டொழிந்து பிறகு மணம் நடத்தலுமுண்டு.

ஒருவருக்குந் தெரியாமல் ஈரோத்திரியில் தம் தங்கை வீட்டைவிட்டுப் போனதையும், அவள் தானே தனி யாய்ப் போகாது கன்னக் காதலனெருவனுடன் போயி னன் என்பதையும் தாய் சொல்லக்கேட்ட தமையன்மார் வெஞ்சின மூண்டெழுந்து, "ஏம்மையும் எங்குலத்தை யுஞ் சற்றும் மதிக்காது எங்குலமனை நச்சியதோடு நில் லாமல் வீட்டினின்றும் வெளிப்படுத்திக் கைக்கொண்டு சென்று, நமக்குப் போர இடும்பையையுந் தீராப் பழியை யும் நல்கிய நீயவனை இன்றே சென்று பிடித்துப் பிணித் துக் கொண்டு வருகின்றேம். கோட்புலி புறத்திருக் கக் குட்டியைக் கொன்னலாமோ?" என்று வஞ்சின மொழித்து, வட்டுடை அணிந்து, வார்க்கச்சு வீக்கி, சரி கையார்த்து, செருப்பு விசித்து, தெரிகணையோடு நின் சில ரெந்தித் தங்கையைத் தேடப் புறப்பட்டார்கள். புறப்பட்டவர் சுற்றிலுமுள்ள காடெங்குந் திருவித் தேடி யும், பக்கத்திலுள்ள சிற்றூர்களிற் சென்று விசாரித்து நாடியும் அவளைக் காணுது அந்தி சோத்தே வீட்டுக்குத் திரும்பினுர்கள். திரும்புகையில் சிறியவும் பெரியவுமாத் தொடர்ந்து முன்சென்ற அடிச்சுவடுகளைக் கண்டு, அவ் வழியேதான் அவர்கள் போயிருக்கக் கூடுமென் றெண்ணி, காலத்தாழ்க்காது உடனே புறப்பட்டு அதே மார்க்கமாக விரைந்து சென்றும் மறுநாள் அவர்களைக் கண்டுபிடித்துவிடலாமென்ற நம்பிக்கையுடன் சென்றார்கள். சென்று, அவர்கள் மறுநாட்காலையில் ஒரு கானியாற்றடைகரையிற் சிறிது தங்கி இளைப்பாறியிரு ந்து மீண்டும் விரைந்து முன்சென்றார். வழியில் வரு வோரையெல்லாம் விசாரித்துக் கொண்டே செல்லு கையில் அவர்கள் இருவினையாகப் பிரியுங் கவலைவழி யொன்றைக் கிட்டினர்கள். கிட்டி எவ்வழியிற் செல்ல தென்று தணிய மாட்டாது, அவ்விரு வழியினும் வரு வோரை வினவியறிந்து பின்பொரு வழியைப் பற்றிப் போவதே சன்னெனத் தேர்ந்து அங்கே அவர்கள் தங்கி யிருந்தார்கள். வருபவர்களையெல்லாம் வினவிக் கொண்டு இவ்வாறவர்கள் தங்கியிருக்கையில் ஒருவழியே வந்த ரெர், "யாம் வரும்வழியில் ஒரு வேங்கை மாத்தடி யில் வைவேற் கன்னையும் வள்ளியையும் அணையாரிருவர் உரையாடி உட்கார்ந்திருக்கக் கண்டோம். அவ்விடம் இங் கிருந்து இரண்டு மூன்று காழிகை தூரமிருக்கும்" என் றுரைத்தார்கள். அதைக் கேட்டு அவர்கள் விரைந்து முன் செல்ல, பிரியாத அவர்களைப் பின்தொடர்ந்து தரையை மோப்பம் பிடித்துக்கொண்டேவந்த வேட்டை நாய்கள், பண்டு தாமுணர்ந்த வாடையை உற்றறிந்தாற் போலக் குரைத்துக் குதித்துக் குதலைத்தோடு முன் சென்றன. அதைக்கண்டு அவர்கள், தமது தலைவியின் அடிச்சுவட்டை மோந்தறிந்துதான் அவைகள் இவ்வா றுவகைகொண்டு ஓடுகின்றன என்றும், அவ்விருவரும் அணித்தாகத்தான் இருத்தல் வேண்டுமென்றும் நிச் சயித்து முன்னினுமுடுகி முன் சென்றார்கள். நாய் களும் வாய்விட்டுக் குரைத்துக் கொண்டே முந்தி ஓடின.

தலைவனுடன் அசைந்து மெல்லப் போய்க்கொண் டிருந்த தலைமகன் அக்கூக்குரலைக் கேட்டு, நாயு டன் வேடர்கள் அவ்வழியேவரக் காரணம் யாதென்று ஐயுற்றுப் பின்திரும்பிப் பார்த்தான்; முன்னே நாய்கள் தான்கும் பின்னே மறவர்கள் பலரும் வரக்கண்டு கூர்ந்து நெடிது நோக்கி, உருவாலும், நிறத்தாலும், குரலாலும் அவைகள் தன்னையன்மாருடைய வேட்டைநாய்கள் என்று அறிந்து நிடுக்கிட்டுத் திகைத்தான். தன்னைத் தேடித் தன்னையன்மார்தாம் வருகின்றார்களென்ற உணர்ந்து, அவர்கள் கொலைக்கஞ்சாக் கொடுந்தொழிலா னர் என்பதை நன்கறிந்த அவன், தன்னன்பினைக் கண்

டதும் அவன்மீது செறுத்தெழுந்த அவர்கள் அவனுக்கு என்ன தீங்கிழைப்பார்களோ என்று அஞ்சி அவலித்து அலமந்தான். இவ்வாறு அவன் பயந்து நடுங்கிக் குலைவதற்குக் காரணம் இன்னதென்று நன்குணராத தலைமகன் அவளைக் கட்டியணைத்து, "நான் உடனிருக்க உனக்கு யாது தீங்கு வரும்? நீ ஒன்றுக்கும் பயப்படாதே; நான் ஒருவனென்று யோசிக்காதே. எத்தனை பேர் வந்தாலும் அவர்களெல்லாம் ஒரு கணத்தில் என் வாளுக்கு இரையாவதைக் காண்பாய்" என்று ஒன்வாளை உறையினின்றுருவித் தன்கையிற்பிடித்து விதிர்த்து அவளை தெரியப்படுத்தித் தேற்றினான். அதைக்கேட்டுஅவன், "அதோவருகின்றவர் என்னைத் தேடிவரும் என்னையர்; காரணமின்றியே கனலும் கண்ணினர்; கச்சரா வென நடுக்கும் கோக்கினர்; குறிதப்பாக் கோலினர். நீரில்லிருந்தால் நிச்சயம் உம்முயிர்க்கேதம் விளையும். எனக்கோ அவர்கள் தீங்கொன்றும் இழையார். என்னை விட்டகன்று அவர் இங்கு வருவதற்குள் நீர் எங்கேனும் ஒடி ஒளித்துக்கொள்ளும். போய்விடும், போய்விடும்." என்று பரிந்து வேண்டினன். அதற்கவன், "என்றன் ஆருயிரனையாய்! போரில் வக்தெதிர்த்தார் எனையாயினும் கொல்வல்ல வாளும் வாளியும் என்கரத்துளவாயினும் உன்னையரைக் கொல்ல நான் ஒருபோதும் உன்னேன், அவர்களைக்குறித்து நீ படுந்துயரத்தைக் காண நான் சகியேனுகையால். நாணிலிருந்தால் சண்டை நிகழ்வது நிச்சயம். நிகழ, அதில் தீங்கு எனக்கேற்பட்டாலும் அவர்க்கு நேர்ந்தாலும், உனக்கு நீங்காக்கேதம் உண்டாவது ஒருதலை. எனக்கு அவமானம் வந்தாலும், என் வீரத்துக்கு மாசுண்டானாலும், உனக்கு யாதொரு துக்கமும் துன்பமும் வாராமற் காத்தலே என் கடமையாகும். ஆகையால் உனது நலத்தைக் கருதி அவர்வசம் உன்னைவிட்டு நான் போர்புரிய அஞ்சினேன் போலப் புறங்கொடுத்துப் போய்விடுகின்றேன்.

போரே கருதி வரிலெவ ராயினும் போர்தொலைத்து
நேரே விசும்பை நிறைகுடி ஏற்றுவென்; நின்னையரேல்
யாரே இவரை வெலநினைப் பாரிவ் விருநிலத்தே?
வாரேய் வனமுலை யாய்மறை வேனம் மலையகத்தே.

நாம் நினைத்தது ஒன்றாக, நமதெண்ணமெல்லாம் பாழ்பட இப்பொழுது நிகழ்ந்தது வேறொன்றாக முடிந்தாலும், நான் சீக்கிரமாக வந்து உன்னைக் காண்பேன். உன்னை ஒருபோதும் மறவேன்; ஒருகணமும் பிரிக்திருக்கலாற்றேன். நீ வருந்தாது செல்.' என்று கூறித் தான் அவ்விடம் விட்டகன்ற ஒரு சிறுகுன்றின் பின்புறத்தே மறைந்தொளித்தான். அவ்வாறு அவன் ஒடியொளிக்கக் கண்ட வழிப்போக்கர் சிலர், உண்மையையுணராது, "இவ்விழிதகையோன் செயல் என்னிது? எனவேடர் முன்னிற்க அஞ்சிக் காதலியைக் கானகத்தே கைவிட்டகலும் இப்பாதகன் எவனே? தனித்து நின்ற தவிக்கும் இவளுக்கு சாமிருந்து சம்மாலியன்ற உதவியைப் புரிந்திடுவோம்." என்று அங்கே தங்கி நின்றார்கள். அதைக்கேட்டு அவள், "அந்தோ! என் பொருட்டாலன்றே இவர்க்கிந்த பரிபவம் வாலாயிற்று. ஆயினுமென்? மானங்கெடலரின் உயிரைப் பேணுத வீரவாட்கையரிவர் பேதைக்குறமகள் ஒருத்தியின் பொருட்டுத் தன்னுயிரைக் காக்கக்கருதி மானத்தை மதியாது நீத்தகன்றார் என்றால் அது அவர்க்கு இசையேயன்றி வசையாமோ? என்னே, இவர்தம் போன்பும் பெருந்தகையும்!

என்னையர்க் கென்றும் இவர்க்கென்றும் ஏதங்
கருதிலித்த
மின்னையர் வற்றுயிர் வீடுமிக் கென்றுமிவ்
வெற்பிடையே
தன்னைய ருற்றிறல் சாயக் கரந்த
தலைவனுக்கென்
முன்னைய ருற்றவ மோ,அறி வோவுற்று
முன்னின்றதே."

என்று வியந்து மயிழ்ந்து நிற்கையில் மறவரெல்லாம் அங்கு வந்திற்றார். அன்னையைக் கண்டதும் நாய்கள் அவளருகணைந்து காலை மோந்து, கையை நக்கி, வாலைக் குழைத்துச் சுற்றிச்சுற்றி வந்து மகிழாகின்றன. அதைக் கண்டதும் தமது சேற்றைத் தணிந்து தங்கையினிடத்து அன்புறுக்க, அவர்கள் ஆதரத்தோடும் அவளை அருகழைத்து, "தாய் தந்தையரையும் தோழிமாரையும் எம்மையும் நீத்தகன்று இவ்வாறு நீ போனதற்குக் காரணம் யாது? உனக்கிந்தத் துர்ப்புத்தி புகட்டியவர் யார்? எம்மை அஞ்சாது உன்னை இங்கழைத்துவந்த கெடுமதியாவன்? உன்னைத் தனியே இங்குவிட்டு எங்கன்றான் அவ்வீரன்? நீ ஒன்றுமறியாப் பேதை; உன்மீது குற்றமொன்று மில்லை. ஆனால் உன்னை மதிமயக்கி வஞ்சித்த கன்னெஞ்சனைச் சும்மாவிடோம்." என்றுரைத்து வினவினர். அதற்கவன், "அவரிடத்துக் குற்றமொன்றும் இல்லை. விதிவசத்தால் என்று அவரை நான் கண்ணுற்றேனோ அன்றே என்மனமுழுதும் அவரிடம் சென்றுவிட்டது. இனிப் பிறவெதையும் என்னுள்ளம் நாடாது. ஆகையால் உமது தங்கையின் நலத்தைக் கோருகின்றீராயின், அவர்க்கு யாதொரு தீங்குமிழைக்க நினையாது, உமது கோபத்தையெல்லாம் என் மீதே செலுத்தி என்னைத் தண்டித்திடும்." என்று அவரை இறைஞ்சி வேண்டினன். அப்பொழுது, இவற்றையெல்லாங் கேட்டுநின்ற உண்மையை அறிந்த அவ்வழிச்செல்வோர், "ஐயன்மீர், இவ்விருவரும் போராக் காதலெனும் பெரும் பாசத்தால் பிணிப்புண்டவர்களாகத் தோன்றுகிறார்கள். இவளுடன் வந்து, சற்று முன்னே நீங்கள் வரக்கண்டு இவளை விட்டகன்ற நாமவேற்காளை, நற்குலத்தினுதித்த நம்பியெனத் திகழ்கின்றான். இவளைப் பிரிந்து அவன் போகும்போது உயிரைப் பிரிந்து உடல் சென்றாற் போல இருந்தது. இவளும் வயதிற் சிறியளாயினும் பேரறிவினள் என்பதும், கற்பிற் சிறந்த பெண்மணி என்பதும் இவள்சொல்லாலே நன்கு விளங்குகின்றன. மனங்கலந்த இவ்விருவரையும் பிரித்து வருத்தக் கருதாது மணம் புரிந்து மகிழ்வித்துக் காண்பதே சேர். வேறொன்றும் நினையாதீர்.

குலனும் நலனுங் குணமுங் குன்றாத குரிசிலிவன்;
நலனென் றியவிவன் கற்பில்நிற் பான்;பின் கண்ணியநீர்
வலனும், பொருசிலை வண்மையும், தொன்மை
மாபும், குன்றாப்
புலனும் பெரிதடை யீர், இனி யாமென் புகல்வதுவே

என்று அவர்களைத் தெருட்டினர்.

அம்மெய்யுணர்ந்தோர் கழறிய சொற்களைக்கேட்டு அவர்கள் தெருண்டு, தங்கையை

செழுங்கொண்ட லும்மதி யுச்சவழ் சாரற்
நிகழருவிக்
கொழுங்குன்ற வாணர் குலமக னேபைங்
குரைகடல் போல்
அழுங்குங் கினையுகம் அன்னையுந் தக்தையும்
ஆயவென்னத்
தொழுங்கும் மகிழப் பெயர்களம் மோடுன்
உளமகிழ்ந்தே

என்று அழைத்துக்கொண்டு தம்மூருக்கு மீண்டார்கள்.

மீண்டுவந்து தம்மில்லிற் புகுதலும் அன்னையர் ஒடிவந்து அவளைத் தழுவி உட்கொண்டு சென்று, கற் கொண்ட கானத்து நடந்து கன்றிய அவளது சிறடிகளைப் பார்த்துப் பார்த்து இரங்கி, வேதுகொண்டொற்றி வருத்தம்போக்கி, உணவூட்டி, இனைப்பாற்றிப் பின் அவளைத் தேடிச்சென்ற தமையன்மாரை வினவி நடந்த செய்திகளை ஒருவாறு அறிக்தார்கள்.

கொஞ்சங் கொஞ்சமாக பாங்கியின் வாயிலாய் நிகழ்ந்ததையெல்லாம் நன்கறிந்த நற்றாய் தன் மகளுக்கும் அவளுடைய காதலனுக்கும் பரம்பரம் ஏற்பட்டுள்ள இரண்டற்ற அன்பையும், அவளது கற்புநிலையையும் தந்தைக்குத் தமையன்மார்க்கும் உணர்த்தி அவ்விருவருடையமணத்துக்கு அவர்களெமென்ன இசைவித்தாள்.

பிறகு சென்றுட்கழிந்ததற் றலைமகன் தலைமகளின் தாய்தந்தையரிடம் முறையோர் எனை அனுப்பி அவர் தம் மகளைத்தான் வேட்க விரும்பிய கருத்தைத் தெரிவித்து, அவர்களுடைய சம்மதத்தைப் பெற்றுப் பிறகு நல்ல நாளிலே அவளை வரைந்து கொள்ளல் முண்டு.

இவ்வுடன்போக்கு, நூல்களில் கான்கு தனிப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, தலைமகன் தலைமகளை அழைத்துக் கொண்டு தன்னூர் போவது உடன் போக்கு என்றும், அவன் அவ்வாறு போனதை அறிந்து வருந்திய நற்றாயின்பொருட்டுச் செவிலித்தாய் அவளைத் தேடிச் சென்று, அவன் நீதின்றி அவனுரைச்-சேர்ந்ததைக் கேட்டுணர்ந்து திரும்பிவந்து அதை நற்றாய்க்குத் தெரிவித்தல் கற்போடுபுணர்ந்தகவ்வை என்றும், தலைமகன் தன்னுடன் கொண்டுசென்ற தலைமகளைத் தன்னூரிலே வரைந்து கொண்டேனும், வரையாமலேனும் நிரும்பி அவளை அழைத்துக் கொண்டு அவன் மனையிற் புகுதல் மீட்சி என்றும், உடன்போக்கை இடைப்புகுந்து தடுத்த தலைவியின் தமையன்மார் வசம் அவளைப் போகவிடுத்துத் தலைவன் வறிதே தன்னூருக்கு மீளல் உடன்போக்கிடையீடு என்றும் விதந்து கூறப்படும்.

K. ஸ்ரீராமரத்நம் ஐயர்.

காந்திமதி என்னும்

காந்தாரநாட்டுக் கட்டழகி.

(805-வது பக்கத் தொடர்ச்சி)

34. நாய்க்குலம் நலம் பெற்றது.

"குன்றப்போர் முடியுமுன் நின் குலமகன் குறுகுவானின்றே" என்று இங்கு அரசனுக்குத் தன் நிற்றப்பன் வழங்கிய உறுதி மொழியைப் பொய்யாக்கப்பட தென்ற பரிவினன்போலப் பெருந்தகைச் சித்தாக்கன் அங்குப் பூமகளனைய இருவருக்கும் ஒருதனிக் கொழுநனுய உவகையோடும் தயிலாத இரவு தேய்த்தவுடன் தன் மனிகர்க்கு எழுந்தேகுஞ் சிறையனுயினன். ஆயவன் தனது மாடம்பின் நிறங்கிக் கீழிடஞ் சேருங்கால், மெல்லென மெல்லென ஒரு குயிலனன் இனியசொற் பயிலுங் குரல்கேட்டு, அனறியாமல் தான்களுக் கிடையே ஒதுங்கி அவண் ஏய்த, மாலினி தனதருஞ் சுணங்கனைத் தீம்பாலூட்டிச் சோட்டினளாய், "உனக்கிய என்னுயிரை உவந்தளித்த பைவா, நின்னருஞ் செயற்கு இணையாக யானுனக்கு என்ன கைம்மாறு ஆற்றவல்லேன். நீம்பால் இதுவேனும், எற்குநீ கல்கிய அமுதத்திற்கிது நிகராமோ! நமன் கையினின்று என்பெருங் காதலனையன்றி நின்னையுங் காத்துக்கொண்டு இங்கு என்னிரு கண்ணுங்களிக்க நீ நிற்கின்ற உதவியை உன்னுன்ன எனதுள்ளம் நெகிழ்கின்றதே" என்று அதன் முதுகைத் தடவருவதும் முகத்தைத் தன் முகத்தோடு அணைத்துக் கொள்வதுமாகி இருப்பதை நோக்கக் கழி பேருவகையால் அகமகிழ்ந் தயலே நின்றனன். இரவெலாம் பசியால் வாடியிருந்த அப்பெரிய நாய் அவன்தன் முகத்தோடணவதிலும் பாலினைப் பருகுவதே இதுபோது பெரிதும் நலமென நினைத்ததால் அவன் கைகழன்று பாலைப்பருக முயன்றும் முடியாது அப்பாத்திரத்தை உருக்கமாய் நோக்கி யிருந்தது. இக்குறிப்புணர்ந்த அவள் பிடியை விட, அந்நாயும் பாதி உடலோடுஞ் சேர்த்துத் தன் வாலை யாட்டிக் கொண்டு பால் குடிப்பதி லமைவதாயிற்று. அந்நக் காலை, பால் ஆக ஆக, "உண் உண்" எனப் பின்னும் பின்னும் பாத்திரத்தில் பெய்து, "வள்ளலே, என் வாழ்விற்கே பால் வார்த்து வளர்த்தவனுகின்றுய். நின்னைப்போல் இவ்வகை னையவல்ல சட்புடையார் எங்குளர். நீ பிறக்க நின் குலம் பிறங்கலாயிற்று. இனி, காயென்ற சொல்லால் நின் இனத்தை இகழ்வோரின் மதியிலா மாந்தர் இலர்" என அவ்வில்லின் மூக்கு முதல் வால்காறும் வருடிக்கொண்டிருந்த மாலினி மீண்டுமதனை வாரியெடுத்து மெய்யுறத் தழுவி செற்றியிலோர் மூத்தமிட்டபோது, "என்னவித எனக்குரிய அன்பிற்குக் கினையாயொரு நாய் எவ்விருந்து வந்தது? உயிரைத்தான் இது காத்தானென். அவ்வுயிரைத்தளிர்க்க வைக்கும் நின் காதலைக் கவர்ந்து செல்கின்றதே..... ன்று, ன்று" என்று புகன்றவண்ணம் இளவரசன் அவன்முன் எய்தி நின்றனன். கண்களையும் நாணமெய்தி நாயினை விடுத்தெழுந்து பக்கயக் கைகளாலே பெருமகன் தோளைப் பற்றித் தொங்கிய நிலையோ டங்குக் காதலால் தளர்ந்து செல்வான் அங்கமும் புளகம் பூப்பக் கோமக னணைத்துக் கொண்டு, "பித்திகீ யானிருக்கப் பேதையா மிந்த நாய்க்கு முத்தஞ் செய்தருள் வதென்! நின் முருக்கிதழ் குவியச் சேர்த்து வைத்தனை யென்ரு லதற்கு வாய்த்தால் தவத்தின் செவ்வி எத்தனை ஆயிற்றென்றே அவ்வியங் கொள்வேன் நானே" என்று அசதிபேசிப் பாராட்டினன். நாயுமோர் இடையூறின்றிப் பாலெலாம் உண்ட பின்னர்த் தானுமே அரசன்மாட்டு அவ்வியங்கொண்ட தென்ன அவர்க்கிடை விரைத்துபுக்கு வாலினைக்குழைய ஆட்டிப் பிரித்திடா திருக்குமாயின், மற்றவர் அங்கு வருவது முணராமல் மெய்ம்மறந்த இவ்விருவரும் கண்டவர் நாணமெய்தத் தழுவியபடியே அன்று நின்றுகொண்டிருந்திருப்பார். எனெனில், காந்திமதி ஒருபுறம் போந்து அவண் எய்தினள். மறுபுறம், மந்தாகினி தனதருந்தோழி கயற்கண்ணியோடும் அனவரவி வரலாயினள்.

முதல்வந்த காந்திமதி இனவேந்தை இறைஞ்சி மாலினுக்கும் வந்தனஞ்செய்த பைவன் செய்தொரு சாகசத்தைப் பராட்டுவானாயினன். அவர்க்கிடையே வந்து சேர்ந்த மந்தாகினியும் பைவனைப் பாவப் பின் பாவரும் இனிமையாய் உரையாட, இதனாணக் கயற்கண்ணியின் கண்கள் உவகைநீர் கலகலவென உகுத்தன. அன்னது

கண்டு 'காரிகை யிவள் யாவள்' என வினவிய கோம கற்கு மத்தாகினி தன்னருந் தோழியின் தரமெலாங் கூறினள். யாவ ரெது பேசினுலும் மீண்டுமீண்டும் அவர் பேச்சுச் சுணங்கணு பெருமையிலேயே வந்து முடிவ தாயிற்று. எக்நெறியில் தம் நன்றியை அந்நாய்க்குச் செலுத்துவதெனத் தேர்வதில் யாவரும் ஒருவரோ டொருவர் இகலி மேன்மேலும் வினம்பினுரெனினும், இவர்தம் எண்ணமெலாம் பிற்பட அந்நாய் செய்த உதவி உயர்ந்திருத்தலால் அதனளவு தம்முடைய கருத்தொன் றும் எட்டியதில்லை யென்று அனைவரும் அங்குச் சோர் வடைந்தனர்.—(மாலினி தன்வயிறுதித்த முதற் புதல்வ னுக்குப் பைரவசிம்மன் எனப் பெயரிட்டனன் என்பது காந்தாரநாட்டின் பின்னுட் சரித்திரதால் தெரியலா கின்றது).

இன்னதன் பின்னர் இளவரசன், அவ்விடம்விட்டு அப்பொழுதே புறப்பட்டு அனைவரும் இரத்தினபுரிக்குப் போதல் வேண்டுமெனப் புகன்றன். காதலனுக் தாமு மாய் யாதும் இடையூறின்றிச் சிறிதுகான் அத்தனி மனையில் இனிதிருந்து போவதற்கு மாலினியும் மந்தா கினியும் அவாவினராய் ஒருத்தி," செல்வ, நின்னுளிங் கிருந்து நாம் அத்திருநகர் சேர்ந்தாலென்! தேன்மூ லும் பூம்பொழிலும் வண்டிரைக்கும் வாவியும் புகுந்து நாம் லீலையாடி, நின்னைப் பெற்றுன்னோம் என்ற அந் நினைவின் தேறலைத் தெவிட்டாதுண்டு இனிதே இங் கிருக்கப் பணித்தருள்வாய்" என, மற்றவன் "என்தனக் கும் கருத்ததுவே; நகரத் தகவயின் நின்னைக் காண்ப தும் அரியதாம், நின் திருக்காட்சி காண்பதற்கு நோற்றேனென் மனம்பயின்ற இவ்வுவகை கனவென்று அகலாமற் காத்தல் வேண்டும்; பெரும பின்னுஞ் சின் னுன் இத்திருமனை இருத்தி" என்ற பரிவுடன் பகர்ந் தனன்.

இவ்வகை இவர் உரைத்தபோது இளவேந்தன் இசைக் கிருந்த தம்பிலிவுனை வெனக் காந்திமதி தன்னுளே சிறிது அஞ்சினுள். அற்றைநாள் விஜயதசமி என்னும் தினவு அவள் உள்ளத்தை உறுத்தியிருந்தது. இன்று தானிருந்த தயங்குவேனையில் அங்குக் கந்தன்தன் கதி யாவதாங்கொலோ வெனக் கவன்றனள். இவன்பால் உள்ளதும் விருப்பினுல் அவன், பெருங்குன்றம் போந் திருந்த கருணுகாருக்கு உரைத்த மொழியொன்றும் காந்திமதி கேட்டிலளாயினும், இன்னபடி கோந்திருக்கு மென்பது இவளது உள்ளுணர்வில் ஒருவாறு தோன்றி எழலாயிற்று. கந்தன் தன்னைக் காதலித்த வண்ணம் தானுமவனைக் காதலிக்க கோததற்குக் காரணம்என்ன வென்ற தன்னையே அவள் பலதரம் வினவிக் கொண்ட தண்டு. "என் நிலைக்கும் அவன் நிலைக்கும் இடையே கிடந்த தூரத்தை உன்னியோ, அவனை மணப்பது நேரிதன்றென விலகுகின்றேன்," என ஐயமுறுவாள். "கலாதாதன் மனங்கலங்க யான் மற்றெருவனை மணப் பது தக்கதன்றென, அவன்பால் இரக்கமே மேலிட்டு இவன்தன் காதலைக் கடக்க முயல்கின்றேன்" என்ற சங்கையும் இவளுக்குத் தோன்றுதிருந்ததில்லை. இன்ன விதம் தன் சிந்தனை தேராமல் தனர்கின்ற காந்திமதி, "ஆயின் எனக்குக் கந்தன்பால் உளவாகும் ஊக்கம் எத் தகைத்து!" என்று ஒவ்வோர்வேளை உய்த்துணரப் புகுங்கால் உடன் பிறந்தான் ஒருவன் மாட்டு வளர்கின்ற வொரு வாஞ்சனையின் னெர்ச்சியே அஃதென மதித் தமர்வான்.

"நீதின்றி இந்நாள் கந்தனுக்குத் நீரவேண்டுமே" எனுந்தியக்கம் உழக்கிய உன்னத்தனாய காந்திமதி இரத் தினபுரி ஏகாமல் இவ்விருக்கத் தரியாளாதல் இயற் கையே. மற்று, தன்னரு மாதரார் இருவர்தம் சொற் கேட்டு இளவரசன் பிற்றைநாள் செல்லலாமென்று இவ் விடமே தங்கிவிட்டால் என்செய்வதென்று எவ்வெ னேனும், அவர் தம் இன்பத்திற்கு மாருக அங்குச் செல்லவேண்டும்" என்ற அவனைத் தண்டுதற்கு மனங் கொண்டிலன். ஆதலின், "அசே, இன்று விஜயதசமியாதலால் யான் இரத்தினபுரி அடைய விழை கின்றேன். நீ இங்கிருத்தல் உன் நிருவுளமாயின், என் னையுன் படகிலே போதற்கு விடைதருக" என்று வேண்டினுன். சித்ராங்கன் விரைவுடன் இரத்தின புரிக்கு ஏகவேண்டு மென்ற நினைத்திருந்தது தன் தந்தையைக் கருதியே யாகும். தானிறந்தான் என்று கேட்டு மன்னவன் நெடுநேரம் தடுமாறித் தளராவண் ணம், அவன் கண்களிக்கச் சென்றெதிர் நிற்க நினைத்த இளவரசன், மாலினியும் மந்தாகினியும் வழங்கிய வார்த்தையால் கட்டுண்டு, தானுயிருடன் இருக்கும் செய்தியை நிருபத்தால் அரசனுக்கு அனுப்பிவிட்டு, ஐயிருதினங்கள் அவ்விடமே இருக்கக் கருதிய தண் டெனினும், இந்நான் விஜயதசமி என்பதைக் காந்திமதி நினை யூட்டியவுடன் செல்வதே கருமமெனத் துணிந்து, "மாதர்காள், இன்று புறப்படுவோம். விஜயதசமித் நிரு நாளில் யாமனைவரும் என் தந்தையால் வாழ்த்தப் பெற் றுக் கோயிலும் சென்று தரிசிக்க வேண்டும். மறுநாள் மீண்டு மிங்கு வந்து சேருவோம்" என விதித்தனன். இவ்வுரையை மறுப்பது அரிதென்று அவரனைவரும் உடன்படச் சிறிது பொழுதில் படகும் இரத்தினபுரி கோக்கிப் புறப்பட்டது.

T. N. சேஷாசலம்.

வர்த்தமானம்.

அண்ணுமலை யூனிவர்சிட்டி:— தெம்பாத்தில் சர். அண்ணுமலை செட்டியார் தன் பேரால் ஒரு சர்வகலா சாலை ஸ்தாபித்ததற்காக கவர்ன்மென்டின் செய்த ஒழுங்கின்படி சட்டசபையில் கொண்டுவரப்பட்ட பில் சென்றவாரம் சட்டசபையால் சட்டமாக ஏற்றுக்கொள் ளப்பட்டது. முதல் வந்த பில்லில் லெ விஷயங்களை மாற்றம்செய்து சர்வகலாசாலையில் யேகன் சாஸ்திரங் கள் கற்பிப்பதுடன் கைத்தொழில் விருத்திக்கேற்ற கல்வியும் பயிற்றவேண்டு மென்பது சேர்க்கப்பட்டு அரசாங்கத்தார் தாம்கொடுப்பதாக ஒப்புக்கொண்ட பணத்தொகை இருபதலகூத்திலிருந்து இருபத்தேழு லகூமாக அதிகப்படுத்திக் கொடுப்பதாக ஒப்புக்கொண் டார்கள்.

இங்கிலாந்தில் புகைவண்டிக் சேதம்:— சென்ற வாரம் இரண்டு இடத்தில் புகை பிரதவண்டிகள் ஒன் ருேடொன்று மோதிப் பெரிய விபத்து எற்பட் டது. ஒன்று னொன்கோவுக்குச் சமீபத்தில் ஒரு மலைச் சுரங்கத்தில் நடந்தது. இதனில் ஒருவன் இறந்து போனதாகவும் ஐம்பது பேர் காயம் பட்டதாகவும் தெரிகிறது. இறந்துபோனவன் அன்றையதினம்தான் விவாகம் பண்ணிக்கொண்ட தன் மனைவியுடன் பிரயா ணம் செய்ததாகத் தெரிகிறது. மற்ற விபத்து சார்வீல்ட் என்னும் இடத்தில் ஒரு மெயில் வண்டி ஒரு சாமான் வண்டியுடன் மோதி, இரண்டு வண்டிகளும் கெருப்புப் பற்றிக் கொண்டன. இதில் ஏழு பேர் இறந்ததாகவும் அனேகர் காயம் பட்டதாகவும் தெரிகிறது.

(இதன் தொடர்ச்சி 839-வது பக்கம் பார்க்க.)

64 பக்கம்

ஆனந்த விகடன்

இதகாறும 48 பக்கம் விஷயங்களுடன் வெளி வந்தஆனந்த விகடன் இந்த ஆண்டி

மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதைச் சந்தா நேயர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். நிறைந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகளைக்கொண்டது. மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் சிறந்தது "ஆநந்த விகடனே". "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு நபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் சமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு ஒரு நபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு

தபால் கூலியுள்ப ரூ. 1—0—0 வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ. 1—4—0

ஆனந்த விகடன் ஆபீஸ், 244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்" மாதிரி காபி இலும். டெலிபோன் நெ. 3311.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான், K. S. வேங்கடரமணி M.A., B. L., ஆங்கிலத்தில் இயற்றியதும், இந்த நாட்டில் மாத் திரமல்லாமல் ஐரோப்பிய தேசங்களிலும் பெரிது கொண்டாடப் பெறுகின்றதுமான "Murugan, The Tiller" என்னும்

நாவல் நூலிற்கு

கிருஷ்ண குமாரி

என்பவரால் எழுதப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு

கதையின் அழகும் வாழ்க்கையின் தத்துவங்களும், மாதட இயற்கையும் பலவேறு பாத்திரங்களின் அமைப் பும் வாய்ந்த இப்புத்தகம் எளியநடையில் அமைக்திருக்கின்றது.

விலை ரூ. 1-8-0 (வி. பி. சார்ஜ் வேறு). மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
"ஆகத்த குணபோதினி"
ஆடி மாதமுதல் ஆங்கில மாத லஞ்சிகைகளை
யொப்ப நவீன நாகரிக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு]வெளிவருகின்றது.[3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத லஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜாவிகோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆகத்தி பம் என்று எண்ணலாம். பதினுயிரம் சந்தாதா ர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தா தார்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனி மையாய், நினைக்க மனோகரமாயிருப்பது ஏது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங் ளுடனும் ஒரேருபாயைச் சந்தாவாகக் கொண் டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாருபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இலும்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

வியாலங்கள்.

வியாலங்கள்! வியாலங்கள்!!

வியாலங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

மேற்கண்ட வியாலங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னேர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினுல். இந்த வியாலங்கள் அச்செய்யுட்களையே பெரும் பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக் கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆறுதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொருமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அன்னதானம்	0	4
இல்லறம்	0	2	பதினுறுபேறு	0	4
துலயழிபாடு	0	2	ஈன் தந்தையர்	0	6

மேல்கண்ட பதினுன்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இலும்.

இன்றே எழுதுங்கள்!

நவீனகதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

கம்பராமாயணம்

பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறுது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

"கலாநிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

ஏமாங்கதத்

திலவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் தன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெரு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,

"கலாநிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

KAMBAN'S KOSALA

or

A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being. The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.

(836-வது பக்கத் தொடர்ச்சி)

சரோஜனி நேவிக்கு வரவேற்பு:—சரோஜனி தேவி க்கு லண்டனில் நிறப்பான வரவேற்பு காங்கிரஸ் சபை யாரால் நடத்தப்பட்டது. டாக்டர் பான்னிபி, G. A. நடேசன், மகமது அலி, சனத் வாலா ஆகியாய அனேக இந்தியரும் சேர்ந்திருந்தார்கள்.

***

இந்திய மந்திரி லார்ட் பர்க்கின்ஹெட்:—இந்தியமந் திரியாய் இருந்த லார்ட் பர்க்கின்ஹெட் தன் பதவியை ஒப்படைத்துவிட்டார். இவருக்குப் பதிலாக ஏர்ல் வின் டேர்டன் இந்திய மந்திரியாக வேலை பார்ப்பார். லார்ட் பர்க்கின்ஹெட் இனிமேல் லியாபாரத்தில் சம்பந்தப்பட விருக்கிறதாகத் தெரிகிறது.

***

தென்ஆபிரிக்காவில்:-இந்தியருடைய அபிவிருத்திக் காகஜோஸ்பர்க் என்னுமிடத்தில் ஐரோப்பியரும் இந்திய ரும் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இதில்சினிவாச சாஸ்திரியாரும் அனேக ஐரோப்பியரும் சேர்ந்திருக்கிறார்கள். இதைப்போன்ற சங்கங்கள் மற்ற இடங்களிலும் சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படும்.

***

சைமன் கமிஷன் :— சென்ற திங்கட்கிழமை சைமன் கமிஷன் பூனாவில் வந்திருக்கிறது. இதில் சைமன் கமிஷன் அங்கத்தவர்களும் பம்பாய் அரசாங்கத் தாரால் தெரிவு செய்யப்பட்ட கமிட்டியாரும் இந்திய சட்ட சபையால் தெரிவு செய்யப்பட்ட லெஜிஸ்லேடிவ் கமிட்டி அங்கத்தவர்களும் ஒன்றாய் விசாரணை ஆரம்பித் திருக்கிறார்கள்.

***

நிருட்டுப்பயல் வைத்துக்கொண்டு பிரயாணம்செய்ப வர்:—சென்னை தென்மாராட்டா புகையிரதப் பாதையில் வட இந்தியாவிலிருந்து சில் திருட்டுப் பாசகளுடன் பிரயாணம் செய்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டு இரகியப் போலீசாரால் விசாரணை நடத்தி கொண்டிருக்கிறது. இதே மாதிரி தென் இந்திய ரயில்வேயிலும் ஒரு கூட் டம் பிரயாணம் செய்ததைக் கண்டுபிடித்து அவர்களைப் போலீஸ் கைதி செய்திருக்கிறார்கள்.

***

கொளும்பில் விஷநாய் ஆஸ்பத்திரி :— கொளு ம்பு விஷநடி ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்யப்படு வோர் நாளொன்றுக்கு அறுபதுபேர் வீதம் இருப்ப தாகத் தெரிகிறது. இதன் காரணமாக இந்த ஆஸ்பத்தி ரியை வேறு இடத்திற்கு மாற்றி விசாலமாகக் கட்ட வேண்டுமென்ற அரசாங்கத்தார் ஒழுங்கு செய்திருக் கிறார்கள். இவ்வருஷம் மழைக் குறைவும் சாய்னை கட் டுப்பாடில்லாமல் நிரியவிடுவதுமே இச்சோய் இவ்விதம் அதிகரித்தற்குக் காரணம்.

***

கல்கத்தா காங்கிரஸின் தீர்மானம் : — இந்த வருஷம் கல்கத்தாவில் கூடக்க விருக்கும் காங்கிரஸ் காட்சிச் சாலையில் பிரித்தானியப் பொருள்கள் ஒன் றும் காட்சிக்கு வைப்பதற்கு எடுத்துகொள்ளப்பட மாட் டாதென்றும் பிரித்தானியப் பொருள்களை விற்பவர்களு டைய விளம்பரங்கள் ஒன்றும் விளம்பரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதென்றும் தீர்மானம் செய்திருக் கிறார்கள்.

பூனாவில் சைமன் கமிட்டியார்:—சென்ற 13-ந் தேதி யன்று சைமன் கமிட்டியார் பூனாச் சென்றனர். பூனாவிலுள்ள எல்லாக் கக்ஷியாரும் சைமன் கமிட்டி யைப் பகிஷ்கரித்தனர். ஸ்ரீகாரிமனும் ஸ்ரீகெல்காரும் மற்றத் தலைவர்களும், ஏராளமான ஜனங்களுடன் கருப் புக் கொடி பிடித்துக்கொண்டு கரைச்சுற்றி ஊர்வல மாய் வந்தனர். மாலையில் டாக்டர் பாஞ்சிபியின் தலை மையின் கீழ் கூடிய கூட்டத்தில் இந்தியர் இக்கமிஷனை ஏற்கவில்லை என்ற தீர்மானம் செய்யப்பட்டது.

***

சென்னையில் புதிய கட்சி:—சென்னையில் சேரு கமிட்டி அறிக்கையைச் சென்னைச் சர்வகட்சி மஹாநாட் டார் ஏற்றதிலிருந்து ஸ்ரீமான் S. ஸ்ரீநிவாஸ ஐயங்காரின் தலைமையில் ஒரு புதியகட்சி ஏற்பட்டு வளர்ந்து வரு கிறது. ஸ்ரீமான் சத்திய மூர்த்தி, ஸ்ரீமான் குழந்தை, ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் ஆகிய பலர் இக்கட்சி யினர். சென்ற வாரத்தில் இப்புதிய கட்சியின் சார்பில் ஸ்ரீமான் ஐயங்கார் தலைமையில் கோக்கலே மண்டபத்தி லும், மறுநாள் ஸ்ரீமான் குழந்தையின் தலைமையில் கடற் கரையிலும் கூட்டங்கள் நடைபெற்றன. "சென்ற சில வருஷங்களாக முற்போக் கடைத்த காங்கிரஸ் கடைசி யாகச் சென்னையில் 1927-ம் ஆண்டு பூர்ண விடுதலைத் தீர்மானத்தை இப்பொழுது சேருக்கமிட்டி அறிக்கையை ஆதரிப்போர் துணையுடன் செய்தது. அவ்வளமிருக்க காங்கிரவின் முடிவைத்தள்ளிக் கோக்கலே காலத்துக் குடியேற்ற நாட்டுரிமை என்பது ஆச்சரியமாகவே யிருக் கிறது. பிரான்ஸ் ஜெர்மனிபோன்ற நாட்டார் குடியேற்ற நாட்டுரிமை என்பதை கேட்கச் சிரிக்கின்றனர்" என்று முறையே பேனார், கூட்டத்தில் ஒரு லெர் பூர்ண விடு தலைக்கு விரோதமாய் இருந்தனர் என்றும், மற்றவர்கள் பூர்ண விடுதலையை ஏற்றனர் என்றும் தெரிகிறது.

***

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி:—சென்னை மகாஜன சபைக் கட்டடத்தில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் தலைமையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் கூடிற்று. அதில் செய்யப்பட்ட தீர்மானங்கள் வரு மாறு:—

"குடியேற்ற நாட்டு உரிமையே இந்தியாவின் குறைந்த கோக்கம் என்னும் அம்சம் தவிர சேரு கமிட்டியின் மற்றப் பாகங்களை இக்கமிட்டியார் ஏற் கின்றனர்.

"1927-ம் வருஷம் சென்னையில் கூடிய காங்கிரஸ் செய்த முழு விடுதலைத் தீர்மானத்திற்கு விரோதமாய்க் காங்கிரஸ் வாதிகள் போதல் கூடாது என்பது இக்கமிட் டியின் முடிவு. எனவே காங்கிரஸ் வாதிகள் முழு விடு தலைக்கு முயன்று வரவேண்டும்.

"குடியேற்ற நாட்டு உரிமையில் நம்பிக்கையுள்ள காங்கிரஸ் வாதிகள் முழு விடுதலை இயக்கத்திற்கு விரோதமாய் ஒன்றும் செய்தல் கூடாது.

"பாரதியார் பாடல்களை அரசாங்கத்தார் பதிமுதல் செய்ததைக் கண்டிப்பதல்லாமல், சட்டசபையில் இது விஷயமாய் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி கொண்டு வந்த தீர் மானத்தை அங்கத்தினர் ஏற்றதற்கு இக்கமிட்டி மகிழ்ச்சி யடைகிறது. மேலும் பாரதியார் பாடல்களைத் தமிழ் நாடெங்கும் பரப்பப் பொது ஜனங்களும் காங்கிரஸ்காரர் களும் முயலவேண்டும்.

"அரசியல் வாதிகளைக் கைது செய்தலை இக்கமிட்டி கண்டிக்கிறது. சைமன் கமிஷனைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறது" இன்னபல தீர் மானங்கள் செய்யப்பட்டுக் கூட்டம் கலைந்தது.

189025

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "KALANILAYAM"

11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)